வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 26.08.2023 சனிக்கிழமை | இதழ் : 259 | பக்கங்கள் : 12




மாருதி Money Exchange (Pvt) Ltd.

இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 221 4433
076 284 4443

இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06

T.P: 011 236 2086

இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்

Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்

WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை



## சீனாவின் ஆய்வு கப்பல் ஒக்.25 இலங்கை வரும்!

கொழும்பு, ஒக. 25

சீனாவின் ஆய்வு கப்பல் எனக் கூறப்படும் ஷி யான் 6 கப்பல் எதிர்வரும் ஒக்ரோபர் 25ஆம் திகதி இலங்கை வருகின்றது.

இந்தக் கப்பல் சுமார் 17 நாட்கள் இலங்கையில் நங்கூரமிட்டு தனது பணிகளை தொடரும் என்றும் அறிய வருகின்றது.

சீனாவுக்கு சொந்தமான் ஷி யான் 6 கப்பல் நேற்றைய தினம் தெற்கு சீனாவில் உள்ள சுஜியாங் கடற்பரப்பில் நங்கூரமிட்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

கடந்த வருடம் சீனாவின் விண்கல் ஆய்வு கப்பல் என்றுகூறப்படும் வாங் 5 கப்பல் இலங்கை வந்தது.

இது தொடர்பில் இந்தியா தனது ஆழ்ந்த

11

# இலங்கையில் சீனாவின் ஆதிக்கம்

# மாற்றப்படுகிறார் இந்திய தூதுவர்!



புதுடில்லி, ஓகஸ்ட் 26

**இலங்கையில் அதிகரிக்கும் சீனாவின் செல்வாக்கு தொடர்பில் இந்தியாவின் மூலோபாய கவலைகளுக்கு இடமளித்துள்ளது. இதையடுத்து, இந்திய தூதுவர் கோபால் பாக்லே மாற்றப்படுகிறார். அவரின் இடத்துக்கு ஐரோப்பிய ஒன்றியத்துக்கான தூதுவர் சந்தோஷ் ஜா நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.**

ஐரோப்பிய ஒன்றியம் - இந்தியா இடையிலான உறவில் சந்தோஷ் ஜா முக்கிய பங்காற்றியுள்ளார். இந்தியாவையும் சீனாவையும் தனது வசதிக்கு ஏற்ப கையாளும் இலங்கையை கட்டுப்படுத்துவதில் - இந்தியாவுக்கு சாதகமாக மாற்றியமைப்பதில் சந்தோஷ் ஜாவின் முக்கியத்துவம் பெறுவார் என்று இந்தியா கருதுகிறது.

பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கை மீள்வதற்கு இந்தியா ஏராளமான உதவிகளை செய்தது. இந்த நிலையில், இலங்கை சீனாவுக்கு அளிக்கும் ஆதரவு இந்தியாவின் மூலோபாய கவலைகளை அதிகரித்துள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் கண்காணிப்பு கப்பல்கள், பாலிஸ்ரிக் ஏவுகணை கப்பலை இலங்கை அனுமதித்தமை இந்தியாவின் பாதுகாப்புக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகவும் கருதப்படுகின்றது. இந்த நிலையிலேயே சந்தோஷ் ஜாவை இலங்கைக்கான தூதுவராக நியமிக்க இந்தியா முடிவு செய்துள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கான தூதுவர் மன்பிரீத் வோஹ்ரா எதிர்வரும் டிசெம்பரில் ஓய்வு பெறுகிறார். அவரின் இடத்துக்கு தற்போதைய இலங்கைக்கான தூதுவர் கோபால் போக்லே நியமிக்கப்படுவார் என்று இந்துஸ்தான் ரைம்ஸ் தெரிவித்துள்ளது. (ஐ)

புலிகளுக்கு உதவிய குற்றச்சாட்டில்

## இந்திய அரசாங்கம் இன்னமும் எனது கடவுச்சீட்டை முடக்கி வைத்துள்ளது!

### குற்றச்சாட்டுகளுக்கு சச்சிதானந்தன் பதில்

யாழ்ப்பாணம், ஒக. 26

“புலிகளுக்கு உதவினேன் என்ற குற்றச்சாட்டில் எனது கடவுச் சீட்டை இன்ன மும் இந்திய அரசு முடக்கி வைத்துள் ளது. நான் வெளிநாடு செல்வதானால் நீதிமன்றை நாடி எனது கடவுச்சீட்டைப் பெற்றே செல்ல முடியும். இதுவரை 17 முறை இவ்வாறே கடவுச்சீட்டைப் பெற்றுள்ளேன். கடவுச்சீட்டைப் பெறுவதற்காக நீதிமன்றை



நாடும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எனக்கு கடவுச் சீட்டை வழங்கக் கூடாது என்றே அரசு சார்பில் வாதிடப்பட்டு வருகின்றது.”,

- இவ்வாறு ஈழம் சிவசேனை அமைப் பின் தலைவர் மறவன்புலவு க. சச்சிதானந்தன் தெரிவித்துள்ளார்.

“இந்திய உளவு அமைப்புக்காக வேலை செய்பவர்”, “இந்தியாவின் கையாள்”, என்று தன் மீதான குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கும் விதமாகவே அவர் மேற்படி கருத்தை வெளியிட்டுள்ளார். தன் மீதான வழக்குக்கு ஆதாரமாக ஆவணங்களையும்

11

## வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சட்டத்தரணிகள் போராட்டம்!

சரத் வீரசேகரவை கண்டித்து



யாழ்ப்பாணம், ஒக. 26

முல்லைத்தீவு நீதிபதிக்கு எதிராக கருத்துகளை வெளியிட்ட சிறீலங்கா பெரஷுமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேக ரவை கண்டித்து நேற்று வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சட்டத்தரணிகள் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

நேற்று வெள்ளிக்கிழமை இதற்கு ஆதரவளிக்கும் வகையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, மாவட்டங்களைச் சேர்ந்த சட்டத்தரணிகள்

11

புலிகள் மீளுருவாக்க முயற்சி;

## 14ஆவது சந்தேகநபரை கைது செய்தது இந்தியா!

சென்னை, ஒக. 26

விடுதலைப் புலிகள் அமைப்பை மீள உருவாக்கும் நோக்கில் செயல்பட்டார் என்ற குற்றச்சாட்டில் மேலும் ஒருவரை இந்திய தேசிய புலனாய்வு முகமை (என். ஐ. ஏ.) கைது செய்துள்ளது.

இதையடுத்து, இந்தக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 14ஆக அதிகரித்துள்ளது. ஆதி லிங்கம் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்று நேற்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

கைதான நபர் சென்னையில் வசிப்பவர் என்றும்

11

## அதிகளவான நீரை அருந்த வேண்டும்!

### மருத்துவர் யமுனானந்தா

யாழ்ப்பாணம், ஒக. 26

தற்போதைய வெப்பமான காலநிலையில் நீரிழப்பு ஏற்படுவதைத் தவிர்க்க அதிகளவு தண்ணீரை மக்கள் அருந்த வேண்டும் என்று யாழ். போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி. யமுனானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தற்போது அதிக வெப்ப நிலை காணப்படுகின்றது. இதனால், பொது மக்கள் பாதிப்புக்கு உள்ளாகும் சந்தர்ப்பம் உள்ளது.

11

## கஜேந்திரகுமார் எம். பியை எதிர்த்து மூவர் போராட்டம்!

கொழும்பு, ஒக. 26

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கொழும்பு வீட்டின் முன்பாக நேற்றைய தினம் சீலவன்ச தேரர் தலைமையிலான மூவர் குழு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.

தேரர் தலைமையிலான குழு ஒன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளது என்று வெளியான தகவலை அடுத்து நேற்றைய தினம் கொழும்பு வீட்டின் முன்பாக பெருமளவு பொலிஸார் இராணுவத்தினர் அந்த வீட்டின் முன்பாக குவிக்கப்பட்டிருந்தனர்.

முன்னதாக, கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் வீட்டை முற்றுகையிட பெருமளவான சிங்கள - தமிழ் மக்கள் திரண்டு வர வேண்டும் என்று உதய கம்மன்பில அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இப்படியும் நடக்கிறது

நண்பர் ஒருவர் போனில் தொடர்பில் வந்தார். எடுத்த எடுப்பிலேயே அவர் சொன்னார், ‘உங்கள் சாதிக்கு ஒருவர் புதிதாக வந்திருக்கிறார் போல’ என்று.

எனக்கு எதுவும் புரியவில்லை. ‘சொல்லுறதை கொஞ்சம் விபரமாக சொன்னால்தானே புரியும்’ என்றேன்.

‘இல்லை, பதின்மூன்றுக்கு ஆதரவாக ஈழநாடும் ஊர்க்குருவியும் தொடர்ந்து எழுதுறதால துரோகிகள் என்கின்ற சாதியில் சேர்க்கப்பட்டிருக்கிறியள். அதுதான் இப்ப அதே துரோகி பட்டியலிலை இன்னுமொருவர் சேர்ந்திருக்கிறார். அதைத்தான் சொன்னனான்’ என்றார் அந்த நண்பர்.

அப்போதும் அவர் யாரைச் சொல்கிறார் என்பது புரியவில்லை.

‘கொஞ்சம் புரியுறமாதிரி சொல்லலாம்தானே’ என்றேன்.

‘அதுதான், நம்மட அமெரிக்க தூதுவர் பதின்மூன்றை ஆதரிச்சது சரியான முடிவு என்று சொல்லியிருக்கிறாவே கவனிக்கவில்லையா’ என்றார்.

அப்போதுதான் அவர் எதைச் சொல்ல வருகிறார் என்பது புரிந்தது.

கடந்த புதனன்று யாழ்ப்பாணம் வந்திருந்த இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், பல்வேறு தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

அவ்வாறான சந்திப்பு ஒன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் புளொட், ரெலோ ஆகிய கட்சிகளின் தலைவர்கள், தமிழரசின் துணைத் தலைவரும் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவருமான சீ. வீ. கே. சிவஞானம் ஆகியோருக்கும் இடையேயும் நடைபெற்றது.

அந்தச் சந்திப்பில் வைத்து, ‘நீங்கள் எதிர்பார்க்கும் புதிய அரசமைப்பு இப்போதைக்கு வரும் சாத்தியமில்லாத நிலையில், 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்தக் கோரும் உங்களது நகர்வு சரியானது’ என்று தூதுவர் அவர்களிடம் தெரிவித்தாரென செய்திகள் வெளிவந்திருந்தன.

அதனையே அவர் நகைச்சுவையாகக் கூறினார் என்பது இப்போதுதான் புரிந்தது.

‘மாட்டுக்கு மாடு சொன்னால் கேட்காது. மணி கட்டின மாடு சொல்லவேண்டும்’ என்று பேச்சு வழக்கில் கூறப்படுவதுண்டு.

அதற்காக நாங்கள் இங்கே யாரையும் மாடுகள் என்று சொல்வதாக அர்த்தப்படுத்த மாட்டீர்கள் என்று நம்புகின்றோம்.

பதின்மூன்றுக்கு ஆதரவாக யார் பேசினாலும் எழுதினாலும் அவர்கள் இந்திய அடிவருடிகள் என்றும் அல்லது அவர்களின் எடுபிடிகள் எனவும் ஒரு தரப்பினரால் பிரசாரம் செய்யப்பட்டு வருவது வாசகர்கள் அறிந்தது தான். அவ்வாறு கூறுபவர்கள் சொல்கின்ற காரணங்களில் முக்கியமானது மாகாண சபைகளை - அதாவது ஒற்றையாட்சிக்குள் ஒரு தீர்வை ஏற்றுக்கொண்டுவிட்டால் பின்னர் சமஷ்டி கோரிக்கையை முன்வைப்பதற்கான தார்மீக உரிமையை இழந்துவிடுவோம் என்பது.

ஆனால், அவ்வாறு கூறுபவர்கள் சமஷ்டியை எப்படி அடையலாம் என்று கூறுவதில்லை. சம்பந்தன் ஐயாகூட, பல வேளைகளில் தமிழ் மக்களை ஏமாற்ற இந்த அரசாங்கங்கள் தொடர்ந்து முயற்சி செய்தால் சர்வதேச சமூகம் பார்த்துக்கொண்டிருக்காது என்று எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

அவர் சொல்கின்ற அந்த சர்வதேச சமூகம் என்பது என்ன என்று இன்றுவரை சாதாரண தமிழ் மக்களுக்கு புரிந்திருக்குமோ தெரியவில்லை. ஆனால், அவர் குறிப்பிடுகின்ற அந்த சர்வதேச சமூகத்துக்குள்ளேதான் அமெரிக்காவும் இருக்கின்றது என்றுதான் இந்த ஊர்க்குருவி நம்புகின்றது.

அப்படியெனில் ‘நீங்கள் எதிர்பார்க்கும் புதிய அரசியலமைப்பு இப்போது சாத்தியமில்லாத நிலையில் பதின்மூன்றை முழுமையாக அமுல்படுத்தக்கோரும் நகர்வு சரியானது’ என்று அமெரிக்க தூதுவர் கூறியிருப்பது எதனை நமக்கு உணர்த்துகின்றது?

எமது இறுதி இலக்கு சமஷ்டியுடன் கூடிய தீர்வு என்றதாக இருந்தாலும் அது கிடைக்கும்வரை காத்திருக்காமல் பதின்மூன்றை முழுமையாக நடைமுறைப்படுத்தக் கோருவது சரியானது என்கிறார் அவர்.

அதாவது, சம்பந்தனும் மற்றவர்களும் சமஷ்டி தீர்வை பெற்றுக்கொள்வதற்கு யாரை நம்பிக் கொண்டிருக்கின்றார்களோ அவர்கள்தான் சொல்கிறார்கள். இடைக்காலத்தீர்வாக அதனை ஏற்றுக்கொள்ளுங்கள் என்று.

நோர்வேயில் வைத்து சர்வதேச அனுசரணையில் நடைபெற்ற பேச்சுகள் வாயிலாக சமஷ்டி தீர்வை சர்வதேசம் முன்வைத்தபோது அதனை நிராகரித்தவர்கள் நாங்கள். அப்போது நமது பலம் தமிழீழத்தை பெறமுடியும் என்ற நம்பிக்கைக்குரியதாக இருந்தது. ஆனால், அப்போது நிராகரித்த சமஷ்டியைத்தான் இப்போது நமது தீர்வாக முன்வைக்கின்றோம்.

அதேபோன்ற ஒரு நிலைமை பதின்மூன்றுக்கும் வந்துவிடக்கூடாது என்கிறார் அமெரிக்கத் தூதுவர் என்று கொள்ளலாமோ?

**- ஊர்க்குருவி.**

# குற்றம் நிரூபிக்கப்படும் எம். பிக்களை பதவி நீக்கும் வகையில் சட்டத் திருத்தம்

## எதிர்க்கட்சி பிரதம கொறடா வலியுறுத்து

கொழும்பு, ஒக. 26

குற்றச்சாட்டுகள் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்களை பாராளுமன்ற சிறப்புரிமை குழுவுக்கு அழைத்து விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. அவர்கள் குற்றவாளிகளாக தீர்மானிக்கப்பட்டாலும் அவர்களை நீக்குவதற்கு எந்த ஏற்பாடுகளும் இல்லை. அதனால் குற்றம் நிரூபிக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர்களை பதவி நீக்க முடியுமான வகையில் அரசமைப்பில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான சிறப்புரிமைகளை பயன்படுத்தி வெளிநாட்டில் இருந்து சட்ட விரோதமான முறையில் தங்கம் கொண்டுவந்தை தொடர்பில் பாராளுமன்ற சிறப்புரிமை குழுவுக்கு அழைத்து விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் சபை முதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த முன்வைத்த சிறப்புரிமை மீறல் தொடர்பான கோரிக்கை தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.



இதுதொடர்பாக அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில்,

பாராளுமன்ற சிறப்புரிமை குழுவுக்கு நீதிபதிகள் அழைக்கப்படுகின்றனர். அதேபோன்று தங்கம் கொண்டுவந்த பாராளுமன்ற உறுப்பினர் இந்த குழுவுக்கு அழைக்கப்படுகிறார். இது நல்ல விடயமல்ல.

சிறப்புரிமை குழு அலிசப்ரி எம்.பிக்கு எதிராக அவர் குற்றம் செய்திருக்கிறார் என அறிக்கை ஒன்றை வழங்கினாலும் அவருக்கு எதிராக பாராளுமன்றத்தால் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது.

இது தொடர்பாக கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போதும் நான் தெரிவித்திருந்தேன். அதனால் நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து, ஊழல் மோசடி குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர்களை பாராளுமன்ற பதவியில் இருந்து நீக்கும் சோல்பரி யாப்பில் இருக்கும் உறுப்புரிமையை, அரசமைப்பு திருத்தம் ஊடாக நடைமுறைக்கு கொண்டுவர வேண்டும் என பிரேரணை ஒன்றை முன்வைக்கிறேன்.

1956இல் இவ்வாறு ஊழல் மோசடி குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்ட ஆளும் கட்சி உறுப்பினர்கள் 4 பேர் பாராளுமன்றத்தில் இருந்து பதவி நீக்கப்பட்டதும் இந்த உறுப்புரிமை அடிப்படையிலாகும். இந்த பிரச்னைக்கு தீர்வொன்றை பெற்றுக்கொள்வதாக இருந்தால் இதனையே செய்ய வேண்டும் - என்றார். (ஐ)

# இலவச மருத்துவ முகாம்!

யாழ்ப்பாணம், ஒக. 26

குழந்தையின்மைக்கான இருநாள் இலவச மருத்துவ ஆலோசனை முகாம் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் வீதியில் உள்ள லொயலாஸ் மண்டபத்தில் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை இந்த முகாம் நடைபெறும்.

இதில், இந்திய மருத்துவ நிபுணர் தாட்ஷாயிணி கலந்து கொண்டு மருத்துவ ஆலோசனைகளை வழங்கவுள்ளார். (ஐ)

# துப்பாக்கி சூட்டில் ஒருவர் காயம்!

கொழும்பு, ஒக. 26

கொழும்பு - பத்தரமுல்லை - கொரவெ பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் ஒருவர் காயமடைந்தார்.

இந்தத் துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் காயமடைந்தவர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த நபர் ஒருவர் துப்பாக்கி சூட்டை நடத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளார் என்று தலங்கம பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் தலங்கம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# முல்லைத்தீவில் பண்டாரவன்னியனின் 220ஆவது ஆண்டு வெற்றி நாள் நினைவு



முல்லைத்தீவு, ஒக. 26

வன்னி இராச்சியத்தின் இறுதி மன்னரான மாவீரன் பண்டார வன்னியனின் 220 ஆம் ஆண்டு வெற்றி நாள் நினைவு கூரல் முல்லைத்தீவு நகரில் உள்ள பண்டாரவன்னியனின் திருவுருவச் சிலைக்கு முன்னால் நேற்று இடம்பெற்றது.

இதன்போது, முல்லைத்தீவு நகரில் அமைந்திருந்த ஒல்லாந்தர் கோட்டையை போரிட்டு வெற்றி கொண்ட வன்னியின் இறுதி மன்னரான மாவீரன் பண்டார வன்னியனின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து, மலர் தூவி நினைவுகூரல் மேற்கொள்ளப்பட்டது.

இதில் வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன், முன்னாள் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் இ.ஜெகதீசன், தமிழரசு கட்சியின் உறுப்பினர்களான கி.சிவகுரு, இ.ஜெரோன்சன், மற்றும் சமூக ஆர்வலர்கள் பலரும் கலந்து கொண்டிருந்ததுடன் திருவுருவச் சிலைக்கு அஞ்சலியும் செலுத்தினர்.

(அ)

# கோழி இறைச்சியின் விலையை 100 ரூபாயால் குறைக்க இணக்கம்

கொழும்பு, ஒக. 26

கோழி இறைச்சியின் விலையை ஒரு கிலோ 100 ரூபாயால் குறைக்க கோழி இறைச்சி வர்த்தகர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

விவசாய அமைச்சர் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே இந்த இணக்கம் எட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மக்காச் சோள இறக்குமதி வரியை கிலோவுக்கு 75 ரூபாயில் இருந்து 25 ரூபாயாக அரசாங்கம் குறைத்ததன் பயனை நுகர்வோருக்கு வழங்குவதே இதன் நோக்கமாகும்.

மேலும், டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி அதிகரிக்கும் பட்சத்தில் நுகர்வோருக்கு அதன் அனுகூலத்தை வழங்குவதற்கும் இதன்போது இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் கோழி இறைச்சியின் வருடாந்த தனிநபர் நுகர்வு 11 கிலோவாகவும், முட்டையின் வருடாந்த தனிநபர் நுகர்வு 138 கிலோவாகவும் அதிகரித்துள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஈழநாடு
Eelanadu
26.08.2023 சனிக்கிழமை
சோபகிருது வருடம், ஆவணி 09

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 205 2300**

# நீதித்துறையின் சுயாதீனத்தின் மீதான அக்கறை

ஒரு நாட்டின் சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதில் நீதித்துறையின் சுயாதீனம் முக்கியமானது. இலங்கையின் நீதித்துறையின் சுயாதீனம் தொடர்பில் சர்வதேச அரங்கில் கேள்விகளுண்டு. இந்த நிலையில், இலங்கையின் நீதித்துறை இன அடிப்படையைக் கொண்டதா என்னும் கேள்வி எழுந்திருக்கின்றது. பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தமிழ் நீதிபதி ஒருவருக்கு எதிராகத் தெரிவித்திருக்கும் கருத்துகள் பாரதூரமானவை. முல்லைத்தீவு நீதிபதி குருந்தூர்மலை விவகாரத்தில் வழங்கிய தீர்ப்பை கடுமையாக விமர்சித்திருக்கும் வீரசேகர தனது பாராளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்தி ஒரு நீதிபதிக்கு எதிராகப் பேசி வருகின்றார். தமிழ் சட்டத்தரணிகள் இதனை ஆட்சேபித்து தங்களின் எதிர்ப்பைப் பதிவு செய்திருக்கின்றனர். தமிழ் சட்டத்தரணிகளின் எதிர்ப்பு நியாயமானது.

இது தமிழ் - சிங்கள சட்டத்தரணிகளின் பிரச்னையல்ல - மாறாக, இலங்கையின் நீதித்துறை தொடர்பானது. சரத் வீரசேகரவின் அடாவடி செயல்பாட்டை இலங்கையின் சட்டத்தரணிகள் சங்கம் எதிர்க்க வேண்டும். நீதித்துறைக்குள் இனவாத தமிழர் விரோத அரசியலை கலக்க முயற்சிக்க வேண்டாமென்று அனைவரும் ஒரு குரலில் பேச வேண்டும். இதுவரையில் அவ்வாறான முதிர்ச்சியை காணமுடியவில்லை. சட்டத்தரணிகள் தமிழ், சிங்களமென்று பிரிந்து செயல்படும் போக்கே மேலோங்கிக் காணப்படுகின்றது. இது ஆரோக்கியமானதல்ல.

தமிழ் மக்கள் இலங்கையின் நீதித்துறையின்மீது நம்பிக்கை வைக்கும் சூழல் முற்றிலும் அற்றுப்போய் வருகின்றது. எனவே, இந்த விடயத்தில் தென்னிலங்கை சட்டத்தரணிகள் அனைவரும் தமிழ் சட்டத்தரணிகளுடன் கைகோக்க வேண்டும் - அவர்கள் உண்மையிலேயே நீதித்துறையின் சுயாதீனத்தை விரும்புபவர்களாக இருந்தால்.

அரசாங்கம் தென்னாபிரிக்க மாதிரி உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவொன்றை பரிசீலித்து வருவதாகக் கூறிவருகின்றது. உள்நாட்டு நீதி பொறிமுறை தொடர்பில் பேசிவருகின்றது- ஆனால், பாதிக்கப்பட்ட மக்களோ உள்நாட்டு பொறிமுறையின் மீதான அவநம்பிக்கையை தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றனர். அவர்கள் சர்வதேச விசாரணையொன்றைக் கோரிவருகின்றனர். இவ்வாறானதொரு சூழலில்தான், சரத் வீரசேகர ஒரு தனிநபராக ஒட்டுமொத்த நீதித்துறைக்கும் சவால் விடுக்கின்றார்.

ஒரு நீதிபதிக்கு எதராகப் பேசுகின்றார். நீதிபதியின் நடவடிக்கையை எதிர்க்கின்றார். ஆனால், சரத் வீரசேகரவுக்கு எதிராக எந்தவொரு சட்ட நடடிவடிக்கையும் இதுவரையில் எடுக்கப்படவில்லை. ஒரு தென்னிலங்கை அரசியல்வாதியால் ஒரு தமிழ் நீதிபதியின் தீர்ப்புக்கு எதிராகப் பேச முடியுமென்றால் - அதன் அடிப்படையில் சிங்கள மக்களை தமிழ் நீதிபதிக்கு எதிராக திருப்ப முடியுமென்றால் - பாதிக்கப்பட்ட மக்களின் உள்நாட்டு பொறிமுறையின்மீதான அவநம்பிக்கை முற்றிலும் நியாயமானது.

இலங்கையின் நன்மதிப்பை சர்வதேசளவில் பாதுகாக்க வேண்டும் என்னும் எண்ணம் சிங்கள சட்டத்தரணிகளுக்கு சிறிதளவாவது இருந்தால் அவர்கள் அனைவரும் சரத் வீரசேகரவுக்கு எதிராக அணிதிரள வேண்டும். இனவாத அரசியலை நீதிமன்றத்திற்குள் கொண்டுவர வேண்டாமென்று தமிழ் - சிங்கள சட்டத்தரணிகள் என்னும் பேதம் மறந்து - நாம் சட்டத்தரணிகள் - என்னும் ஒரு சுலோகத்தின் கீழ் சரத் வீரசேகர போன்ற அரசியல்வாதிகளை எதிர்க்க வேண்டும்.

இந்த விடயத்தில் சட்டத்தரணிகள் மற்றும் சட்டம் - ஒழுங்கை பாதுகாக்க வேண்டுமென்னும் எண்ணம் கொண்ட சிங்கள சிவில் சமூக அமைப்புகள் அனைவரும் ஓரணியாக செயல்பட வேண்டும். இந்த விடயத்தில் பொறுப்புடன் செயல்படத் தவறினால் - எதிர்காலத்தில், இலங்கையின் அனைத்து நீதிபதிகளும் இனவாத அரசியலில் செல்வாக்குச் செலுத்தக்கூடிய அனைத்து அரசியல்வாதிகளையும் கண்டு அஞ்ச வேண்டிவரும்.




## யாழ். பல்கலையில் மலையக கதைகளின் காட்சி

*கொழும்பு, ஓக. 26*

மலையகம் 200 ஆண்டு நிகழ்வை ஒட்டி யாழ். பல்கலைக்கழகத்தில் 'சொர்க்கத்தின் சுமை: மலையகக் கதைகளின் காட்சி' என்ற கண்காட்சி கடந்த புதன்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நுண்கலைத்துறை மற்றும் கலை வட்டத்தின் ஏற்பாட்டில் நுண்கலைத்துறை காட்சிக்கூடத்தில் நடைபெறும் இந்தக் கண்காட்சியை எதிர்வரும் 31ஆம் திகதி வரை காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை பார்வையிட முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

## சிறுவரை பாதுகாக்குமாறு கிளிநொச்சியில் நடைபவனி



*கிளிநொச்சி, ஓக. 26*

சிறுவர் உரிமைகளை பாதுகாக்க கோரி விசேட விழிப்புணர்வு நடைபவனி நேற்று வெள்ளிக்கிழமை கிளிநொச்சி - முரசுமோட்டையில் நடைபெற்றது.

சிறுவர் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு "சிறுவர் உரிமைகளை பாதுகாப்போம்" எனும் தொனிப்பொருளிலான விழிப்புணர்வு பேரணி முரசுமோட்டை நவஜீவனம் பகல் பராமரிப்பு நிலைய சிறுவர்கள், பெற்றோர்கள் இணைந்த வகையில் குறித்த பேரணியை நவஜீவனம் பங்குத்தந்தை அருட்பணி புண்ணியராஜ் ஆரம்பித்து வைத்தார்.

"குழந்தைகள் பாலியல் பொருட்கள் அல்ல", "சிறுவர்களை தீய வார்த்தைகளால் பேசுவதை தடுப்போம்", "சிறுவர்களை மது போதை அடிமையிலிருந்து மீட்போம்", "வன்முறைகளில் இருந்து சிறுவர்களை நாம் பாதுகாப்போம்", என்ற வாசகங்கள் தாங்கிய பதாதைகளுடன் நடை பவனி ஏ-35 வீதியின் கோரக்கன் கட்டு சந்திவரை சென்று நிறைவுபெற்றது.

(ஐ)

## மனத் தூய்மைக்கான தியானமுறை பயிற்சி

*யாழ்ப்பாணம், ஓக. 26*


விபாசனா கற்றுத் தந்த ச. கோயங்காவால் நடத்தப்படும் மனத்தூய்மைக்கான தியானமுறை அறிமுக நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அரியாலை ஜன சமூக நிலையத்திலும் பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் கலைத்தூது கலாமன்றத்திலும் நடைபெறவுள்ளன.

தொடர்ந்து எதிர்வரும் புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் வலய முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சியும் பிற்பகல் 3 மணிக்கு குருநகர் தொடர்மாடி சமூக மண்டபத்திலும் இந்தத் தியான முறை அறிமுகம் செய்யப்படவுள்ளது.

தம்மசேது விபாசக மைய ஆசிரியர் அ.சுப்பிரமணியம் விபாசனா ஆசிரியர் ஆர். மோகன் (சென்னை) மற்றும் தம்ம திரிவேணி அறக்கட்டளை குழு உறுப்பினர் சரவணன் ஆகியோர் இந்த பயிற்சி நெறியை வழங்குகின்றனர். இதில் அனைவரும் பங்கேற்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் புதிய முயற்சிகள் தள்ளிப் போய் முடியும். உத்தியோகத்தில் மற்றவர்களின் வேலையையும் சேர்த்து பார்க்க வேண்டி வரும். நிதானம் தேவைப்படும் நாள்.

**இடபம்**
உங்கள் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். வியாபாரத்தில் நெளிவுசுளிவுகளை கற்றுக்கொள்வீர்கள். புது பொறுப்புகளை ஏற்பீர்கள். தன்னம்பிக்கை பிறக்கும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் இரட்டிப்பு லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் சில புதுமைகளை செய்வீர்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**கடகம்**
புதிய முயற்சி யாவும் வெற்றி அடையும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயல்படுவார்கள். சக ஊழியர்கள் உங்கள் வேலைகளை பகிர்ந்து கொள்வார்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**சிம்மம்**
எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். பழைய நினைவுகளில் மூழ்கும் நாள்.

**கன்னி**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். தைரியம் கூடும் நாள்.

**துலாம்**
குடும்பத்தில் நிம்மதி உண்டு. இழுபறியாக இருந்த வேலை முடியும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். வியாபாரத்தில் போட்டிகள் வரும். சக ஊழியர்கள் உதவுவார்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடை தாமதம் ஏற்படும். அதிகாரிகள் அலைக்கழிக்கப்படுவார்கள். சகிப்புதன்மை தேவைப்படும் நாள்.

**தனுசு**
மறைமுக விமர்சனங்களும் தாழ்வுமனப்பான்மையும் வந்துச் செல்லும். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி லாபம் வரும். சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும். உழைக்க வேண்டிய நாள்.

**மகரம்**
கடந்த கால இனிமையான அனுபவங்களை நினைவு கூர்ந்து மகிழ்வீர்கள். சகோதரர்களால் பயனடைவீர்கள். தைரியமாக முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். சிந்தனைத் திறன் பெருகும் நாள்.

**கும்பம்**
உங்கள் செயலில் வேகம் கூடும். சிலர் உங்களை வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் நம்பிக்கையை பெறுவீர்கள். சாதித்துக் காட்டும் நாள்.

**மீனம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். பிள்ளைகள் சொல்படி நடப்பார்கள். வாகனத்தை சரி செய்வீர்கள். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாகும். புது அதிகாரி உங்களை மதிப்பார்.

# அ. தி. மு. க. பொது கூட்டம் செல்லும் உச்சநீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்தது

சென்னை, ஒக. 26

கடந்தாண்டு ஜூலை 11ஆம் திகதி நடந்த அ. தி. மு. க. பொதுக்குழு செல்லும் என்று ஏற்கெனவே உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதால் அந்த பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் செல்லும் எனத் தீர்ப்பளித்துள்ள சென்னை உயர் நீதிமன்றம், தீர்மானங்களை எதிர்த்து பன்னீர்செல்வம் உள்ளிட்டோர் தாக்கல் செய்த மனுக்களை தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

அ. தி. மு. க. பொதுக்குழுக் கூட்டத்துக்கு தடைவிதிக்க கோரி பன்னீர்செல்வம் தொடர்ந்த வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்ற தனி நீதிபதி, பொதுக்குழுக் கூட்டம் நடத்தலாம் என்று உத்தரவிட்டார். இதனைத் தொடர்ந்து ஓ. பி. எஸ். தொடர்ந்த மேல்முறையீட்டு வழக்கை விசாரித்த இரு நீதிபதிகள் அமர்வு அளித்த உத்தரவின் அடிப்படையில் அந்தப் பொதுக்குழுக் கூட்டத்தில் ஒற்றைத் தலைமை தொடர்பாக எந்த தீர்மானமும் நிறைவேற்றப்படவில்லை. அ. தி. மு. க. பொதுக்குழு ஜூலை 11ஆம் திகதி மீண்டும் கூடும் என்று அறிவிக்கப்பட்டது.

2022 ஜூலை 11ஆம் திகதி கூட்டப்படவிருந்து அ. தி. மு. க. பொதுக்குழுக் கூட்டத்திற்கு தடை விதிக்க கோரி ஓபிஎஸ் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மீண்டும் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி அ. தி. மு. க. பொதுக்குழுவை நடத்த தடையில்லை என்று தீர்ப்பளித்தார். இதனையடுத்து, அவைத்தலைவர் தமிழ்மகன் உசேன் ஒப்புதல் பெறப்பட்டு 16 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மேலும் கட்சியின் இடைக்காலப் பொதுச் செயலாளராக எடப்பாடி பழனிசாமி தேர்வு செய்யப்பட்டார்.

இதைத்தொடர்ந்து, ஜூலை 11ம் தேதி நடந்த அ. தி. மு. க. பொதுக்குழுக் கூட்டத்தை செல்லாது என அறிவிக்கக் கோரியும் இந்த பொதுக்குழு சட்டவிரோதமானது என அறிவிக்கக் கோரியும் ஓபிஎஸ் மற்றும் அவரது ஆதரவாளர்கள் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், ஜூலை 11ஆம் திகதி நடைபெற்ற அ. தி. மு. க. பொதுக்குழு செல்லும் என்று தீர்ப்பளித்தது. இந்த தீர்ப்பை எதிர்த்து ஓ. பி. எஸ். மற்றும் அவரது ஆதரவாளர் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில், இந்த வழக்கில் நேற்று நீதிபதிகள் பிறப்பித்த தீர்ப்பில், "அ. தி. மு. க. பொதுக்குழு செல்லும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. எனவே, அந்த பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் தலையிட முடியாது. அ. தி. மு. க. பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு தடை விதிக்கக் கோரி ஓபிஎஸ் உள்ளிட்ட 4 பேர் தாக்கல் செய்த மனுக்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றன - என்று அறிவித்தனர்.

# நீதிக்கும் உண்மைக்கும் கிடைத்த வெற்றி தீர்ப்பு

## பழனிசாமி தெரிவிப்பு

சேலம், ஒக. 26

அ. தி. மு. க. பொதுக்குழு தீர்மானங்கள் செல்லும் என்ற சென்னை உயர் நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு, நீதிக்கும் உண்மைக்கும் தர்மத்துக்கு கிடைத்திருக்கக்கூடிய தீர்ப்பு. எங்கள் பக்கம் நியாயம் இருந்தது. எனவே, நியாயப்படி எங்களுக்கு தீர்ப்பு கிடைத்துள்ளது" என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

சேலத்தில் அ. தி. மு. க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்று செய்தியா



ளர்களைச் சந்தித்தார். அப்போது அவரிடம், அ. தி. மு. க. பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் செல்லும் என்ற உயர் நீதிமன்ற தீர்ப்பு குறித்து கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர்,

"நீதி, தர்மம் வென்றுள்ளது. அ. தி. மு. க. பொதுக்குழுவில் எடுக்கப்பட்ட முடிவை நீதிமன்றம் அங்கீகரித்துள்ளது. அதிமுக பலமாகத்தான் உள்ளது. நிச்சயமாக அ. தி. மு. க. வருகின்ற பாராளுமன்றத் தேர்தலில் மிகப் பெரிய வெற்றி பெறும். தேசிய அளவில் தேசிய ஜனநாயக கூட்டணியில் நாங்கள் அங்கம் வகிக்கின்றோம். தமிழகத்தைப் பொறுத்தவரையில், தமிழகத்தில் அ. தி. மு. க. தலைமையில் கூட்டணி இருக்கும். அந்த கூட்டணி பாராளுமன்றத் தேர்தலில் மகத்தான வெற்றி பெறும்" என்றார்.

# தமிழை காப்பதற்கான போராட்டத்தில் ஆன்மீகவாதிகள் பங்களிக்க வேண்டும்!

## முதல்வர் ஸ்டாலின் அழைப்பு

சென்னை, ஒக. 26

தமிழ் காக்கும் போராட்டம், சமூக சீர்திருத்த இயக்கம் உள்ளிட்ட அனைத்திலும் கடந்த காலத்தைப்போல, இன்றைய ஆன்மிகவாதிகளும் பங்களிக்க வேண்டும் என முதல்வர் மு. க. ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தருமபுரம் ஆதீனம் கலைக் கல்லூரியின் 75ஆவது ஆண்டு - பவள விழா நிறைவு நிகழ்வில் பங்கேற்று பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அனைத்து நன்மைகளும் அனைவருக்கும் கிடைக்கக்கூடாது என்று ஏங்கும் ஒரு கூட்டம்தான் எங்களுக்கு எதிரான



பரப்புரையில் ஈடுபடுகிறது. தருமபுரம் ஆதீனம் போன்ற நல்லிணக்கத்தையும் சகோதரத்துவத்தையும் விரும்புகிற சந்நிதானங்கள், தமிழக மக்கள் எங்களை ஆதரிக்கிறார்கள் என்பதே போதுமானது.

நாட்டுக்கும் மக்களுக்கும் பண்பாட்டுக்கும் ஆபத்து வரும் போதெல்லாம் ஆன்மீகப் பெரியோர்கள் அதற்கு எதிராக குரல் கொடுத்து போராடியுள்ளனர். ஹிந்தி எதிர்ப்பு போராட்டம், தமிழ் காக்கும் போராட்டம், சமூக சீர்திருத்த இயக்கம் உள்ளிட்ட அனைத்திலும் ஆன்மிகவாதிகள் தங்கள் பங்களிப்பை கடந்த 100 ஆண்டுகளாக செலுத்தியது போல, இன்றைய ஆன்மிகவாதிகளும் பங்களிக்க வேண்டும்.

தமிழ் மொழி, தமிழகம், தமிழர்கள் இந்த மூன்றும் காப்பாற்றப்பட்டால்தான், இது போன்ற மடங்கள் தோற்றுவிக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேறும் - என்றார். (ஐ)

# மதவாதத்தை முதலீடாக்க நீதிபதியை விமர்சிப்பதை யாருமே ஏற்கமுடியாது!

## ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி

யாழ்ப்பாணம், ஓக. 26

**மதவாதத்தை முதலீடாக்க நீதிபதியை விமர்சிப்பதை ஏற்க முடியாது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்தார்.**

குருந்தூர் மலை விவாகாரத்தில் தீர்ப்பு வழங்கிய நீதிபதியை அவமதித்து கருத்து வெளியிட்ட தென்னிலங்கை அரசியல் வாதிகளின் செயற்பாட்டை தாம் வன்மையாக கண்டிப்பதாவும் கூறினார்.

அவர் மேலும் தெரிவிரிக்கையில்-

பாராளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்தி சில இனவாத அரசியல்வாதிகள் வெளியிடுகின்ற கருத்துக்கள் தமிழ் மக்களை ஆத்திரமூட்டுவதாக இருக்கின்றது.

குருந்தூர்மலை விடயம் தொடர்பாக நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் உடன்பாடு இல்லை எனில் அதை மேன்முறையீடு செய்வதற்கும் அல்லது உயர் நீதிமன்றம் செல்வதற்கும் சட்டத்தில் வழிவகைகள் உள்ளது.

இவ்வாறான கருத்துக்கள் இன நல்லிணக்கத்தில் இடைவெளியை உருவாக்கும் ஒன்றாகவே அமைகின்றது. நீதிமன்ற தீர்ப்பை அவமதிப்பதும் தனிப்பட்ட ரீதியில் நீதிபதியை விமர்சிப்பதையும் ஏற்றுக்கொள்ள முடியாது-என்றார்.

(அ-2)

# போலி வீஸாவில் கனடாவுக்குச் செல்ல முயற்சித்தவர் கட்டுநாயக்கவில் கைது!

கொழும்பு, ஓக. 26

போலியான கனேடிய வீசாவைப் பயன்படுத்தி துபாய் ஊடாக கனடாவுக்குச் செல்ல முற்பட்ட நபர் ஒருவரை நேற்று முன் தினம் புதன்கிழமை இரவு கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் குழுவினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிலியந்தலை பிரதேசத்தில் வசிக்கும் 32 வயதான இவர் பல தடவைகள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளமையும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இவரது கனேடிய விசா தொடர்பில் சந்தேகமடைந்த விமான அதிகாரிகள், அவர் சமர்ப்பித்த அனைத்து ஆவணங்களையும் குடிவரவு மற்றும் எல்லை பாதுகாப்பு பிரிவு அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர்.

அங்கு நடத்தப்பட்ட தொழில்நுட்ப சோதனையில், இந்த விசா மோசடியாக தயாரிக்கப்பட்டது என்பது உறுதி செய்யப்பட்டதையடுத்து, குடிவரவு அதிகாரிகளால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார்.

(அ)

# 2 போலி வைத்திய நிலையங்கள் வவுனியா பிரதேசத்தில் சிக்கின!

வவுனியா, ஓக. 26

வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தினரும், பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது முறைகேடான வகையில் தனியார் வைத்தியசாலைகள் இரண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

வவுனியா வைத்தியசாலையில் அண்மையில் இடம்பெற்ற வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளரின் ஊடக சந்திப்பின்போது வவுனியாவில் முறைகேடான முறையில் அதாவது உரிய தகுதி பெறாத வைத்தியர்கள் சிலர் தனியார் வைத்தியசாலைகளையும், மருந்தகங்களையும் நடத்துவதாக ஊடகவியலாளர்கள் குற்றம் சாட்டி அதனை சுட்டிக் காட்டியிருந்தனர்.

இதனையடுத்து, வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தியின் பணிப்புக்கு அமைய வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தினர் மற்றும் பொலிஸார் இணைந்து வவுனியா, நெளுக்குளம் பகுதியில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது ஆயுள்வேத வைத்தியர் ஒருவர் தனியார் வைத்தியசாலையின் பேரில் ஆங்கில மருந்துகளை விநியோகம் செய்வது கண்டு பிடிக்கப்பட்டதுடன், அங்கிருந்த பெருந்தொகையான மருந்துகளும் மீட்கப்பட்டுள்ளது.

அத்துடன், சிதம்பரபுரம் பகுதியில் உள்ள ஒருவர் ஆயுள்வேத வைத்தியர் என்ற பெயரில் வைத்தியசாலை ஒன்றினை நடத்தி வந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த வைத்தியசாலையில் இருந்த ஆயுள்வேத மற்றும் ஆங்கில மருந்துகள் மீட்கப்பட்டுள்ளதுடன், குறித்த நபர் ஆயுள்வேத வைத்தியர் இல்லை என்பதும் தெரிய வந்துள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த தனியார் வைத்தியசாலைகளை நடத்திய உரிமையாளர்கள் இருவரையும் விசாரணைக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதுடன், குறித்த இரு நிலையங்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சுகாதார சேவைகள் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

(அ)

# விளையாட்டு அமைச்சை பெறுவதற்காக சிலர் விசர்நாய் போல் செயல்படுகின்றனர்

## ரொஷான் ரணதுங்க சபையில் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 26

விளையாட்டுத்துறை அமைச்சை பெற்றுக்கொள்வதற்காக ஒருசிலர் விசர்நாய்களைப்போன்று நாவை தொங்கக்போட்டுத்தி ரிகின்றனர். இவர்கள் எனக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் முரண்பாட்டை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் நடவடிக்கை அமைச்சர் ரொஷான் ரணதுங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற கிரிக்கெட் விளையாட்டு தொடர்பான சபை ஒத்திவைப்பின்போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கிரிக்கெட் நிறுவனத்தில் மாத்திரமல்ல அனைத்துவகையான விளையாட்டுத்துறைகளிலும் ஊழல் மோசடி மலிந்து காணப்படுகின்றன.

குறிப்பாக கிரிக்கெட் நிறுவனத்தில் இடம்பெறும் மோசடிகளை இல்லாதொழிக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். என்றாலும் இது பாரிய சவாலாகும். இதற்காக செயற்படும்போது பல சவால்களை எதிர்கொள்ள நேரிடுகின்றது.

என்றாலும் கிரிக்கெட் நிறுவனம் உட்பட விளையாட்டுத்துறையில் இடம்பெற்றுவரும் ஊழல மோசடிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்போது அதற்கு எதிராக சிலர் செயற்படுகின்றனர்.

சில சந்தர்ப்பங்களில் ஜனாதிபதிக்கும் எனக்கும் இடையில் பிரச்னைகளை ஏற்படுத்த அரசாங்கத்தில் இருக்கும் சிலர் செயற்படுகின்றனர்.

சிலர் இந்த விளையாட்டுத்துறை அமைச்சை பெற்றுக்கொள்ள விசர்நாய்களைப் போன்று நாவை தொங்கவிட்டுக்கொண்டு திரிகின்றனர். இதற்கு காரணம் சில விளையாட்டுச் சங்கங்களில் இருக்கும் பணமாகும்.

அத்துடன் விளையாட்டுத்துறை அமைச்சர் என்றவகையில் அனைத்து விடயங்களிலும் விரல் குத்த நான் விரும்பம் இல்லை. நான் தவறு செய்வதாக இருந்தால் அதனை யாருக்கு வேண்டுமானாலும் சுட்டிக்காட்ட முடியும்.

என் சுயாதீனத்தை நான் மதிக்கிறேன். அதேபோன்று விளையாட்டு சங்கங்களினதும் சுயாதீனத்தன்மை பாதுகாக்கப்பட வேண்டும்.

கடந்த காலங்களில் இந்த விடயங்கள் குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு சென்றால் பணத்துக்காக கோப்புகளை மறைக்கின்றனர். இதுதான் உண்மை கதை. அதனால் இதனை மாற்றியமைக்க அனைவரதும் ஒத்துழைப்பு அவசியமாகும்-என்றார்.

(அ)

# சுகாதாரப் பாதுகாப்பு உதவித் திட்டம் ஜனவரியில் மீண்டும் ஆரம்பிக்கப்படும்

## பிரிட்டன் பதில் தூதுவர் பிரதமரிடம் உறுதி



கொழும்பு, ஓக. 26

ஐக்கிய இராச்சியத்தின் உதவித் திட்டத்தின் 2ஆம் கட்டத்தை இலங்கையில் ஆரம்பிப்பது தொடர்பாக பிரித்தானிய பதில் தூதுவர் திருமதி லிசா வான்ஸ்டால், பிரித்தானிய சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஃப்ளெமிங் நிதியத்தின் பிரதிநிதிகள் மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோருக்கு இடையில் நேற்று முன் தினம் புதன்கிழமை கொழும்பு அலரி மாளிகையில் கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

கோவிட் தொற்றுநோய் காரணமாக கடந்த சில ஆண்டுகளாக நிறுத்தப்பட்டிருந்த சுகாதாரப் பாதுகாப்பு உதவித் திட்டம் 2024 ஜனவரியில் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று பிரிட்டிஷ் பதில் தூதுவர் இங்கு தெரிவித்தார்.

இது நோயாளியின் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும், தேசிய சுகாதாரக் கொள்கை பற்றி அறிவிக்கவும் மற்றும் உருவாகி வரும் அச்சுறுத்தல்கள் குறித்து எச்சரிக்கவும் பொது சுகாதார கண்காணிப்புத் துறைக்கு ஆதரவளிக்கும்.

இந்த உவித் திட்டமானது சுகாதார அமைச்சு, உலக சுகாதார தாபனம் மற்றும் ஏனைய நிறுவனங்களின் ஆதரவுடன் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், சுகாதாரத் துறை ஊழியர்களுக்கு பயிற்சிப் புலமைப் பரிசில்கள் வழங்கப்படும்.

நாட்டின் சுகாதார முறைமையின் முன்னேற்றத்திற்கு மிகவும் பயனுள்ள இந்த சுகாதார சேவை திட்டத்தின் பயனாளியாக இலங்கையை தெரிவு செய்தமைக்காக ஐக்கிய இராச்சியத்திற்கு பிரதமர் நன்றி தெரிவித்தார்.

இலங்கையின் சுகாதார சேவை பிரித்தானிய முறைமையின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப் படுவதாகவும், இவ்வாறான சுகாதார சேவை திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் எவ்வித சிரமமும் ஏற்படுவதில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பிரிட்டிஷ் கவுன்சிலின் வதிவிட பணிப்பாளர் திரு. ஓர்லாண்டோ எட்வர்ட்ஸ், கவுன்சிலின் ஆங்கில மொழி பயிற்சி முறைகள் குறித்த வெளியீட்டுத் தொகுதிகளை பிரதமரிடம் வழங்கினார்.

கிராமப்புறங்களில் உள்ள இளைஞர் யுவதிகளுக்கு ஆங்கில மொழிக் கல்வியை அறிமுகம் செய்யுமாறு பதில் தூதுவரையும், பிரிட்டிஷ் கவுன்சிலையும் பிரதமர் கேட்டுக் கொண்டார்.

(அ)

# சிறுபான்மைச் சமூகங்களுடன் இராணுவம் நம்பிக்கையை கட்டியெழுப்புவது அவசியம்!

## அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 26

**இலங்கையில் நிரந்தர சமாதானத்தை உறுதிப்படுத்த, இராணுவம் சிறுபான்மை சமூகங்களுடன் நம்பிக்கையை கட்டியெழுப்பவேண்டியதன் அவசியம் குறித்து அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.**

இலங்கை இராணுவத்தின் படைத் தளபதி மேஜர் ஜெனரல் எஸ்.பி.அமுனுகமவை யாழ்ப்பாணத்தில் சந்தித்தபோது இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் இதனை வலியுறுத்தியுள்ளார்.

இராணுவத்தை நவீனமயமாக்குவதற்கான இலங்கையின் முயற்சிகள் உட்பட, பாதுகாப்பு ஒத்துழைப்புக்கள் குறித்து இதன்போது ஆராயப்பட்டுள்ளது.

வடக்குக்கான விஜயத்தை மேற்கொண்ட தூதுவர், யாழ்ப்பாணத்தில் உள்ள சிவில் சமூகத் தலைவர்கள் உட்பட பலதரப்பட்ட சமூகங்களைச் சந்தித்து அவர்களின் கருத்துக்களை கேட்டறிந்தார்.

இந்தநிலையில் ஜனநாயக இலங்கைக்காக ஒன்றிணைந்து செயல்படுவதற்கு ஆற்றல்மிக்க குரல்களும் பங்காளிகளும் அவசியம்' என தூதுவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# எந்த தேர்தலையும் எதிர்கொள்ள தயார்

## தேசிய மக்கள் சக்தி அறிவிப்பு



கொழும்பு, ஓக. 26

"நாட்டில் எந்த தேர்தல் நடைபெற்றாலும் அதனை எதிர்கொள்வதற்கு தேசிய மக்கள் சக்தி தயார்." - என்று அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தல் நாட்காட்டியின் பிரகாரம் தற்போது உள்ளாட்சிசபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். அடுத்தது ஜனாதிபதி தேர்தல். ஆனால் எந்த தேர்தல் நடைபெற்றாலும் அதனை எதிர்கொள்வதற்கு நாம் தயார்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பாளர் தேசிய மக்கள் சக்தியில் இருக்கின்றார். அநுர சக்திவாய்ந்த, சிறந்த தலைவர்." எனவும் ஹரிணி அமரசூரிய குறிப்பிட்டார். (அ)

# இலங்கையில் பணியாற்றும் ஊழியர்களுக்கு சிங்கப்பூர் எயார்லைன்ஸ் விசேட கௌரவம்

கொழும்பு, ஓக. 26

உலக முழுவதும் உள்ள ஊழியர்களில் இலங்கையின் கட்டுநாயக்க விமான நிலையத்தில் பணிபுரியும் ஊழியர்களை 2023ஆம் ஆண்டின் சிறந்த ஊழியர்களாக சிங்கப்பூர் எயார்லைன்ஸ் தெரிவு செய்துள்ளது.

விமான பயணிகள் சேவைகள், விமான சரக்கு செயல்பாடுகள், இருக்கை முன்பதிவுகள், வினைத்திறன் மற்றும் நட்பு சேவைகள், தகவல் தொடர்பு சேவைகள் போன்றவை இந்த தெரிவில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

இதற்கான பரிசளிப்பு விழா கடந்த 15ஆம் திகதி சிங்கப்பூர் ஷங்ரிலா ஹோட்டலில் இடம்பெற்றதுடன், விருதை பெற்றுக் கொள்வதற்காக சிங்கப்பூர் எயார்லைன்ஸின் கட்டுநாயக்க விமான நிலைய முகாமையாளர் தில்ருக்ஷி குடாலியனகே உள்ளிட்ட குழுவினர் அங்கு சென்றனர்.

சிங்கப்பூர் எயார்லைன்ஸ் உலகின் சிறந்த விமான நிறுவனமாக 11 முறை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. சிங்கப்பூர் எயார்லைன்ஸிடம் 300 க்கும் மேற்பட்ட நவீன விமானங்கள் உள்ளன. மேலும் இந்நிறுவனம் உலகெங்கிலும் உள்ள 64 நாடுகளுக்கு நேரடி விமான சேவைகளை இயக்குகிறது.

கொரோனா தொற்றுநோய் தீவிரமடைந்திருந்த காலப்பகுதியில் சிங்கப்பூர் எயார்லைன்ஸ் குழு, அபாயமான சூழலுக்கு மத்தியில் இலங்கையில் ஆற்றிய சேவைகளை அங்கீகரிக்கும் வகையில், சிங்கப்பூர் ஏர்லைன்ஸுக்கு சமீபத்தில் "கிரிட்" விருதும் வழங்கப்பட்டது. (அ)

# பெரும் வீழ்ச்சியில் ஆடை தொழிற்துறை

கொழும்பு, ஓக. 26

இலங்கையின் ஆடைத் தொழிற்துறையானது தொடர்ந்து நஷ்டத்திற்கு உள்ளாகியுள்ளதுடன், போட்டி நாடுகளுடன் ஒப்பிடுகையில் அதன் சந்தைப்பங்கை இழக்கத் தொடங்கியுள்ளது என உச்ச தொழிற்துறை அமைப்பான கூட்டு ஆடைகள் சங்க மன்றம் தெரிவித்துள்ளது.

இலங்கையை பொருத்தவரை அந்நிய செலாவணியை அதிகம் பெற்றுக்கொடுத்த ஒரு துறை ஆடை தொழிற்துறையாகும். ஆனால், தற்போதைய நிலைமை ஆடைத்தொழிற் துறைக்கு சாதகமாக இல்லை என்பதை ஆய்வுகள் கூறுவதாகவும் கூட்டு ஆடைகள் சங்க மன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

குறிப்பாக இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற சந்தைகளில் சிறந்த சந்தை அணுகல் ஏற்பாடுகளால் பயனடையும் நாடுகளுக்கான சந்தைப் பங்கை இலங்கை இழக்கிறது என்பதை கவனத்தில் கொள்ளவேண்டியது அவசியம் ஏற்பட்டுள்ளது.

இலங்கை இந்த இழந்த சந்தைப் பங்கை மீளப் பெறுவதற்கு, இந்த சந்தைகளுக்கு சிறந்த அணுகலைப் பெற வேண்டும் எனவும் அதிகூடிய உற்பத்திகளை வெளிக்கொண்டுவரவேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையின் ஆடை ஏற்றுமதிகள் கடந்த ஜூலை மாதத்தில் அதிக வீழ்ச்சியை எட்டியுள்ளது.

இதன் ஏற்றுமதி வருமானம் 401 மில்லியன் அமெரிக்க டொலர்களாக வீழ்ச்சியடைந்துள்ளது. இது வருடாந்த ஏற்றுமதியில் 23.17 வீத வீழ்ச்சியாகும்.

கடந்த ஐந்தாண்டுகளில் ஆடைத் தொழிற்துறையின் ஏற்றுமதி வருவாயின் மேலோட்டமான பகுப்பாய்வு, 2021ஆம் ஆண்டில் குறைந்த அளவாகப் பதிவாகியிருந்ததைக் காட்டுகிறது.

இங்கிலாந்துக்கான ஏற்றுமதியில் துல்லியமான வீழ்ச்சி காணப்பட்டது. அந்த சந்தைக்கான ஆடை ஏற்றுமதி 31.32 சதவீதம் குறைந்து 51.50 மில்லியன் அமெரிக்க டொலர்களாக உள்ளது.இவை அனைத்து மூல சந்தைகளுக்கும் ஏற்றுமதி சரிவைக் காட்டியது.

இதேபோல், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பிற சந்தைகளுக்கான ஏற்றுமதிகள் 18.70 சதவீதம் குறைந்து 173.70 மில்லியன் அமெரிக்க டொலர்களாகவும், 24.07 சதவீதம் முதல் 117.16 மில்லியன் அமெரிக்க டொலர்களா டொடாலர்களாகவும் குறைந்துள்ளன.

கடந்த ஏழு மாதங்களுக்கு அனைத்து சந்தைகளுக்கும் ஏற்றுமதிகள் குறைந்துள்ளதால், ஒட்டுமொத்த பகுப்பாய்வும் ஒரு சரிவை காட்டியது.

ஜனவரி-ஜூலை 2023 காலப் பகுதியில், ஆடை ஏற்றுமதியின் வருவாய் 2.68 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது, இது ஆண்டுக்கு 18.94 சதவீதம் குறைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# துப்பாக்கி சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஓக. 26

தலங்கம பகுதியில் நேற்று அதிகாலை நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த நபர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் உறுதிப்படுத்தின.

44 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பத்தரமுல்லையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அமைந்துள்ள பகுதிக்கு அருகாமையிலுள்ள ரொபர்ட் குணவர்தன மாவத்தையில்

இந்த சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றதாக தலங்கம பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நபர் கோரம்பே பகுதியைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டார்.

குறித்த நபர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு தப்பிச்சென்றுள்ளனர்.

துப்பாக்கிப் பிரயோகத்திற்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் தலங்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளை திருத்துவதற்கான யோசனை முன்வைப்பு

கொழும்பு, ஓக. 26

பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளை திருத்துவதற்கான யோசனையை முன்வைக்க ஆளுங்கட்சி எதிர்க்கட்சியிடம் ஆதரவை கோரியுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்திற்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் பல்வேறு செயல்பாடுகளில் ஈடுபடுவதால் நிலையியற் கட்டளைகளில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமென ஆளுங்கட்சி கூறியது.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை ஆளுங்கட்சி உறுப்பினரும் கல்வி அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றும்போதே இவ்வாறு கூறினார்.

அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேலும் கருத்து வெளியிடுகையில்,

பாராளுமன்ற கௌரவத்துக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் பல எம்.பிகள் செயல்படுவதுடன், நிலையியற் கட்டளைகளை மதிக்காதும் செயல்படுகின்றனர்.

பாராளுமன்றத்திற்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் செயற்படும் பாராளுமன்ற உறுப்பினர்களை சபை செயல்பாடுகளில் இருந்தும் பாராளுமன்றத்தில் இருந்தும் வெளியேற்றும் வகையில் நிலையியற் கட்டளைகளை திருத்துவதற்கு எதிர்க்கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த ஆளும் கட்சி தயாராகவுள்ளது.

இந்த ஆண்டு மே மாதம் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் உள்ள பிரமுகர் ஓய்வறையின் ஊடாக 3.3 கிலோ கிராம் தங்கம் மற்றும் 74 ஸ்மார்ட்போன்களை நாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்த பாராளுமன்ற உறுப்பினர் ரஹீம் எதிரான குற்றச்சாட்டுகள் உள்ளன.

தனது இராஜதந்திர கடவுச்சீட்டைப் பயன்படுத்தி தங்கம் மற்றும் ஸ்மார்ட்போன்களை கடத்தியதன் மூலம் பாராளுமன்றத்தை அவமதித்ததாக கண்டறியப்பட்டதால், எம்.பி. ரஹீமை சிறப்புரிமைக் குழுவின் முன் அழைக்க வேண்டும் எனக் கூறினார்.

அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவின் கருத்தை வரவேற்ற பதிலளித்த எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல, சட்டத்துக்குப் புறம்பாகச் செயற்படும் பாராளுமன்ற உறுப்பினர்களை சபை அமர்வுகளில் இருந்து வெளியேற்றுவதற்கான ஏற்பாடுகள் உருவாக்கப்பட வேண்டும் என்றார்.

"எம்.பி.க்கள் கடுமையான குற்றங்களைச் செய்யும் போதெல்லாம் அவர்களை நீக்குவதற்கான விதிகள் இல்லை. சோல்பரி பிரபுவின் காலத்தில் கூட இவ்வாறான ஏற்பாடுகள் இருந்ததோடு இலஞ்சம் பெற்ற நான்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் சபையில் இருந்து வெளியேற்றப்பட்டனர். இவ்வாறான ஏற்பாடுகள் மீண்டும் அறிமுகப் படுத்தப்பட வேண்டும் என நான் முன்மொழிகிறேன்" எனவும் லக்ஷ்மன் கிரியெல்ல கூறினார்.

"எதிர்க்கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த நாங்கள் தயாராக இருக்கிறோம். கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்த விடயத்தை எடுத்துரைக்க தயாராக இருக்கிறோம்," என்று அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். (அ)

# மீன்பிடிக்கச் சென்றவர் காட்டு யானை தாக்கி பலி!

கொழும்பு, ஓக. 26

காட்டு யானை தாக்குதலுக்கு இலக்காகி நபரொருவர் உயிரிழந்துள்ளார் என்று கந்தகெட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

கந்தகெட்டிய பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட 01/5 கந்தகெட்டிய பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் உமாஓய ஆற்றில் தனது நண்பர்களுடன் மீன்பிடிக்கச் சென்று மீண்டும் வீடு திரும்பும், போது பத்தாகல. காட்டு பகுதியில் வைத்து யானை தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளதாகவும் உயிரிழந்தவர் 42 வயதுடையவர் என தெரிவிக்கப்படுகிறது.

மேலதிக விசாரணைகளை கந்தகெட்டிய பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# சுற்றுலா வீஸாவில் வெளிநாடுகளில் வேலைக்கு அனுப்பிவரும் மாபியாக்களை எதிர்க்கவேண்டும்

## அமைச்சர் மனுஷ நாணயக்கார கோரிக்கை

கொழும்பு, ஓக. 26

அப்பாவி மக்களை சுற்றுலா விசா மூலம் வெளிநாடுகளில் பணியாளர்களாக வேலைக்கு அனுப்பும் மாபியாக்களுக்கு இந்நாட்டு பேராசிரியர்களும் அரசியல்வாதிகளும் துணை நிற்பது கவலைக்குரிய விடயம் என தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

மனித வள மற்றும் தொழில் பாதுகாப்பு திணைக்களத்தில் கடமையாற்றும் தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-



இந்நாட்டு தொழில் சந்தையானது மிகவும் போட்டித்தன்மை வாய்ந்ததாக காணப்படுகிறது.

அரச பல்கலைக்கழகங்களிலிருந்து வெளிவரும் இளைஞர் மற்றும் யுவதிகளுக்கு இன்று வேலை வாய்ப்புகள் இல்லை.

கொழும்பில் உள்ள பிரதான நிறுவனங்களில் ஆட்சேர்ப்பு செய்யபவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே உள்ளது.

எவ்வாறாயினும், ஒரு நாள் ஒரு அரச பல்கலைக்கழகத்தை சேர்ந்த பெண் பேராசிரியர் ஒருவர் அங்கு காணப்படும் நடவடிக்கைகள் குறித்து என்னிடம் சவால் விடுத்தார். மாணவ சமுதாயத்துக்கு ஏற்பட்டுள்ள நிலை தொடர்பில் ஆராய்ந்து பார்க்குமாறும் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது காணப்படும் கீழ்த்தரமான கல்வி முறைமையின் ஊடாக மக்கள் சரியான பாதைக்கு இட்டுச் செல்லப்படவில்லை.

நன்கு கற்றவர்கள் உலகை பரந்த எண்ணத்தோடு பார்க்க வேண்டும்.

சுற்றுலா விசா மூலம் வெளிநாட்டு பணியாளர்களாக மக்கள் அனுப்பப்படுவதை பேராசிரியர்கள் ஊக்குவிக்க கூடாது- என்றார். (அ)

# கொழும்பில் 70 வீத வளி மாசுக்கு வாகனங்களின் புகையே காரணம்



கொழும்பு, ஓக. 26

கொழும்பு மாவட்டத்தில் 70 சதவீதம் வளி மாசடைவதற்கு வாகனங்களிலிருந்து வெளியேற்றப்படும் புகையே காரணம் என மோட்டார் வாகன போக்குவரத்து ஆணைக்குழுவின் ஆணையாளர் நிசாந்த அனுருத்த தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அத்துடன் வாகனத்தை செலுத்தும் போது அதிலிருந்து வெளியேற்றப்படும் புகையினை அளவிடுவதற்கு திட்டம் ஒன்று தயாரிக்கப்படும். மேலும் அதிகமான புகை வெளியேற்றத்துடன் வாகனங்கள் பயணிக்கும் பட்சத்தில் அதனை புகைப்படம் எடுத்து வட்ஸ்அப் செயலிக்கு அனுப்பிவைக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

குறித்த புகைப்படத்திற்கு அமைவாக வாகன உரிமையாளருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# அலி சப்ரி விடயத்தில் விசாரணை வேண்டும்

## அமைச்சர் சுசில் வலியுறுத்து

கொழும்பு, ஓக. 26

**பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் விடயத்தில் முழுமையான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த குறிப்பிட்டுள்ளார்.**

**பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை மீறலின் கீழ் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த பாரளுமன்றில் இவ்வாறு கருத்துத் தெரிவித்திருந்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் 2023 மே ஆம் திகதி 3 கிலோ கிராமிற்கு அதிகமான தங்கம் அதாவது சுமார் 7 கோடிக்கும் அதிக பெறுமதியான தங்கம் மற்றும் நவீன கைத்தொலைபேசிகளை அவரது பாராளுமன்ற சிறப்புரிமை இராஜதந்திர கடவுச்சீட்டு அகிய வற்றை முறைகேடாக பயன்படுத்தி சட்ட விரோதமாக கொண்டு வந்து கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய விஐபி முனையத்திற்கு எடுத்து செல்ல நடவடிக்கை எடுத்துள்ளார்.

குறித்த சட்ட விரோத செயலால் இலங்கை சுங்க பிரிவினர் குறித்த பாரா ளுமன்ற உறுப்பினருக்கு 75 இலட்சம் ரூபா விதித்ததோடு கொண்டு வரப்பட்ட அனைத்து பொருட்களையும் அரசுடைமையாக்கவும் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

இந்த சம்பவத்தை சுங்க பிரிவின் அத்தியட்சகர் பாராளுமன்ற பொது செயலாளருக்கு கடந்த 6 ஆம் மாதம் 13 ஆம்



திகதி எழுத்து மூலம் அறியப்படுத்தினார்.

அதற்கமைவாக பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமினால் 2018 மார்ச் ஏழாம் திகதி பாராளுமன்றத்தினால் அனுமதிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் நடத்தை ஒழுங்குமுறை மீறப்பட்டுள்ளதோடு மக்கள் பிரதிநிதி என்ற வகையில் மக்கள் நம்பிக்கையினையும் துவம்சம் செய்துள்ளார்.

இவ்வாறு நடந்துக்கொள்வது என்பது இந்நாட்டின் மேன்மையான பாராளுமன்றத்தில் சிறப்புரிமையை மீறிய செயலாகும்.

இந்த காரணங்கள் பாராளுமன்ற கட்டளைச் சட்டத்தின் கீழ் நெறி முறைகள் மற்றும் சிறப்புரிமைகளின் கீழ் ஆராயப்பட்டு முழுமையான விசாரணை மேற்கொள்ளப்பட்டு முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ள தயவாய் வேண்டுகிறேன்-என்றார். (அ)

# துரிதமாகும் கொழும்பு துறைமுக நகரத்தின் கட்டுமானப் பணிகள்





கொழும்பு, ஓக. 26

கொழும்பு துறைமுக நகரத்தின் கட்டுமானப் பணிகள் மிக வேகமாக இடம்பெற்று வருவதுடன், 2025ஆம் ஆண்டின் இறுதியில் நகரத்தை திறப்பதற்கான எதிர்பார்ப்பில் அரசாங்கம் உள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு துறைமுக நகரம் என்பது கொழும்பில் அமைந்துள்ள ஒரு சிறப்பு பொருளாதார வலயம் மற்றும் சர்வதேச நிதி மையமாகும்.

இது கொழும்பின் மத்தியல் அமையபோகும் வர்த்தக மையம் என்பதுடன், இலங்கை வரைபடத்தில் இணையப்போகும் புதிய நகரமாகும்.

கடலில் மணலை நிரப்பி உருவாக்கப்பட்டுள்ள இந்த நகரம் 269 ஹெக்ரேர் பரப்பளவைக் கொண்டது.

கொழும்பு துறைமுக நகரத்தில் தெற்காசியாவின் சொகுசான குடியிருப்புகளும், வைத்தியசாலைகளும், பொழுதுபோக்கு அம்சங்களும் உருவாக்கப்படவுள்ளதுடன், தெற்காசியாவின் வர்த்தக மையமாகவும் இலங்கையின் நிதி மாவட்டமாக இதனை கருத திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், நகரத்தில் தற்போதைய நிலையை வெளிகாட்டும் வகையில் எடுக்கப்பட்டுள்ள புகைப்படங்கள் வெளியாகியுள்ளன. நகரத்தின் பிரமாண்டத்தை வெளிப்படுத்தும் வகையில் இந்த புகைப்படங்கள் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவளிக்குமாறு அனைத்து எம்.பிக்களிடமும் சஜித் அணி கோரிக்கை

கொழும்பு, ஓக. 26

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு அனைத்து கட்சிகளும் ஆதரவு வழங்கவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத்துள்ளது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சுகாதார பிரச்னைக்கு அமைச்சரே காரணம் எனவும், எனவே, மக்கள்மீது உண்மையான அக்கறை இருந்தால் ஆளுங் கட்சியினரும் இதற்கு ஆதரவளிக்கவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பிக்கள் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் சுகாதார தரப்பினர் நேற்று முன்தினம் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த நிலையிலேயே, இந்த அழைப்பை பிரதான எதிர்க்கட்சி விடுத்துள்ளது.

சுகாதார அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை செப்ரெம்பர் முதல் வாரத்தில் விவாதம், வாக்கெடுப்புக்கு எடுத்துக்கொள்ளப் படவுள்ளது. (அ)

# இந்திய அரசின் உதவியுடன் திருமலையை பொருளாதார மையமாக மாற்ற நடவடிக்கை

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

**திருமலை, ஓக. 26**

**1980 களில் மகாவலி அபிவிருத்தித் திட்டம் செயற்படுத்தப்பட்டது போன்று கிழக்கு அபிவிருத்தித் திட்டமும் துரிதப்படுத்தப்பட்டு நாட்டின் பொருளாதாரத்திற்கு புத்துயிரளிக்கும் சூழல் ஒன்று உருவாக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

**இந்தியாவின் உதவியுடன் திருகோணமலையை வலுசக்தி, போக்குவரத்து, துறை முகம், கப்பற்துறை, விமானம் , கைத்தொழில் மற்றும் சுற்றுலா மையமாக அபிவிருத்தி செய்யும் இலக்குடன் கூடிய வேலைத்திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.**



திருகோணமலை விமானபடை தளத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற திருகோணமலை அபிவிருத்தி தொடர்பான விசேட கூட்டத்தில் கலந்து கொண்டபோதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மாவட்டத்தில் உள்ள அரச காணிகள் மற்றும் மகாவலி காணிகளை முகாமைத் துவம் செய்வது தொடர்பில் இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், 2019-2023 காலப்பகுதியில் அந்தக் காணிகளை வழங்குதல் குறித்து அறிக்கையொன்றை தமக்கு வழங்குமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு அறிவித்தார்.

அபிவிருத்திச் செயன்முறையில் காணிகள் முதன்மையான காரணியாகும் எனவும், அதில் சரியான முகாமைத்துவத்துடன் பேணப்படாவிட்டால், எதிர்பார்க்கும் அபிவிருத்தி இலக்குகளை அடைய முடியாது எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதன்போது தெரிவித்தார்.

அத்துடன், போட்டிபோட்டுக்கொண்டு மத வழிபாட்டுத் தலங்கள் அமைப்பதை நிறுத்துமாறும், எதிர்காலத்தில் திருகோணமலை மாவட்டத்தில் மத வழிபாட்டுத் தலங்களை நிர்மாணிக்கும்போது, ஆளுனர், மாவட்ட அரசியல் தலைவர்கள் மற்றும் அரச அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து முடிவெடுக்க வேண்டுமெனவும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

கிழக்கு மாகாணத்தின் குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தின் அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காகவே இன்று இந்தக் கூட்டம் கூட்டப்பட்டது. தற்போது திருகோணமலை மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பான திட்டத்தை சர்பானா ஜூரோன் நிறுவனம் தயாரித்துள்ளது.

அந்தத் திட்டத்தினை அடிப்படையாகக்கொண்டு திருகோணமலையை அபிவிருத்தி செய்வது தொடர்பில் இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. அதனை நாம் நடைமுறைப்படுத்த வேண்டும்.

அந்த அபிவிருத்தித் திட்டத்தின் பிரகாரம் வெருகல் முதல் பானமை, குமன கடற்கரையை அபிவிருத்தி செய்வதற்கும் வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காக கடற்கரையை பயன்படுத்திக்கொள்ள இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

அதே நேரத்தில், இந்தப் பகுதியில் நவீன விவசாயமொன்றை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தின் ஏனைய பிரதேசங்களும் இதில் உள்வாங்கப்பட வேண்டும். மேலும் மகாவலி அதிகாரசபை மற்றும் காணித் திணைக்களத்தையும் இதற்கு இணைத்துக் கொள்ள வேண்டும்.

திருகோணமலை மாவட்டத்தின் கடற்றொழில், விவசாயம் மற்றும் சுற்றுலாத் துறைகளில் ஏற்படும் இந்த புதிய முன்னேற்றத்துடன் திருகோணமலை நகரத்தை ஒரு முக்கிய வர்த்தக நகரமாக மாற்ற வேண்டும். திருகோணமலைக்குப் பின்னர் மட்டக்களப்புக்கும் அம்பாறைக்கும் இந்த அபிவிருத்தியைக் கொண்டு செல்வதே எமது நோக்கமாகும்.

குறிப்பாக காணிப் பிரச்னைகளைத் தீர்த்து நாம் இந்தச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இதன் போது, மகாவலி காணிகள் குறித்து விசேட கவனம் செலுத்தி, அவற்றை எவ்வாறு அபிவிருத்தி செய்யலாம் என்பது குறித்தும் கண்டறியப்பட வேண்டும்.

அத்துடன் திருகோணமலை அபிவிருத்தித் திட்டத்தின் அமுலாக்கத்தில், மகாவலி திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் 1985 திட்டத்தின் பிரகாரம் இருக்கக்கூடிய காணிகளை பெற்றுக்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆனால் கிழக்கு மாகாணத்தில் சில காணிகள் அமைச்சரவையின் அனுமதியின்றி வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

பல்வேறு மத வழிபாட்டுத் தலங்களுக்கும் அதிகளவான காணிகள் வழங்கப்பட்டுள்ளதாக கணக்கெடுப்பில் தெரிய வந்துள்ளது. எனவே, போட்டி போட்டுக் கொண்டு மத வழிபாட்டுத் தலங்கள் நிர்மாணிப்பதை நிறுத்த வேண்டும். அதன் போது மாகாணத்தின் அரசியல் தலைவர்கள் மற்றும் மதத் தலைவர்களுடன் கலந்துரையாடி சரியான முடிவை எட்டுவது மிகவும் முக்கியமானது என்பதைக் கூற வேண்டும்.

1985 ஆம் ஆண்டு, மகாவலி அபிவிருத்தித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட போது, எடின்பரோ பிரபு இங்கு வருகை தந்து வழங்கிய காணிகள், தற்போது வன ஜீவராசிகள் அமைச்சினால் காடுகளாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன.

இலங்கையில் வனப்பரப்பு 32 வீதமாக பேணப்பட வேண்டும். அந்த நிலையில் ஏனைய காணிகள் நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்தப்பட வேண்டும்.இன்று சிங்கப்பூர் மற்றும் துபாய் போன்ற நாடுகள் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக அதிகளவு காணிகளைப் பயன்படுத்தியுள்ளன.

அண்மையில் நான் சிங்கப்பூர் சென்றிருந்த போது அந்நாட்டு அரசாங்கம் இலங்கையிடம் அரிசியைக் கோரியது. கடந்த ஆண்டு நாம் அவர்களிடம் அரிசியைக் கேட்டது போன்று, இந்த ஆண்டு எங்களிடம் அவர்கள் அரிசி கேட்கிறார்கள். எனவே, நாட்டில் நவீன விவசாயத்தை உருவாக்கி, விவசாய உற்பத்திகள் மூலம் உலகப் பொருளாதாரத்தை வெல்வதற்கு நாம் செயற்பட வேண்டும்.

திருகோணமலை அபிவிருத்தித் திட்டத்தை விரைவில் நடைமுறைப்படுத்துவதன் மூலம் இந்த அபிவிருத்தி இலக்குகளை எட்டுவதற்கு நாம் முயற்சிப்போம். அதற்கு அரச அதிகாரிகள் உட்பட அனைவரும் அர்ப்பணிப்புடன் செயல்படுவார்கள் என நான் எதிர்பார்க்கிறேன்- என்றார். (அ)

# அம்பாறையில் ஐஸ் மழை!

காரைதீவு, ஓக. 26

அம்பாறை, பதியதலாவ பிரதேசத்தில் ஐஸ் கட்டியுடன் வீசிய பலத்த காற்றினால் பாரிய மரங்கள் வீழ்ந்துள்ளதுடன் வீடுகளின் கூரைகளும் தூக்கி வீசப்பட்டுள்ளன.

எதிர்பாராத விதமாக திடீரென்று ஏற்பட்ட காலநிலை மாற்றத்தால் பதியத்தலாவ முழு பிரதேச மக்களும் பலவிதமான இன்னல்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

அம்பாறை- பதியத்தலாவ வீதி, மட்டக்களப்பு- பதுளை வீதி, கண்டி வீதி போன்ற இடங்களில் பாரிய மரங்கள் வீழ்ந்ததால் போக்குவரத்து முற்றாக தடைப்பட்டது, தூர இடங்களுக்கு அவசரமாக செல்ல வேண்டிய வாகனங்கள் மாற்று பாதைகளை பயன்படுத்தியதாக பதியத்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

பதியத்தலாவ கனிஷ்ட வித்தியாலய இரண்டு மாடிக் கட்டடத்தில் மரமொன்று முறிந்து விழுந்ததால் கட்டிடம் பலத்த சேதத்திற்கு உள்ளாகியுள்ளதுடன் அருகிலிருந்த தற்காலிக வகுப்பறை தொகுதியின் கூரை பலத்த காற்றினால் தூர வீசப்பட்டுள்ளது.

இதே வேளையில் மின்சாரமும் தடைப்பட்டிருந்ததால் பிரதேசமெங்கும் இருளில் மூழ்கியிருந்ததாகவும் மகா ஓயா இலங்கை மின்சாரசபை ஊழியர்கள் அம்பாறையிலிருந்து மேலதிக ஊழியர்களை வரவழைத்து மின்சார விநியோகத்தை வழமைக்கு கொண்டு வருவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர்.

பாதிக்கப்பட்ட மக்கள் பாதுகாப்பாக தங்குவதற்கான தற்காலிக ஏற்பாடுகளை பதியத்தலாவ பிரதேச செயலகம் மேற்கொண்டிருந்ததாக பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் தெரிவித்தார். (அ)

## கல்முனை மாநகர நிதி மோசடி;

# முன்னாள் கணக்காளருக்கு செப். 6 வரை விளக்கமறியல்!

கல்முனை, ஓக. 26

கல்முனை மாநகர நிதி மோசடி தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைதான முன்னாள் கணக்காளரை எதிர்வரும் செப்டம்பர் 06 வரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு கடந்த புதன்கிழமை கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம் சம்சுதீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது குற்றப்புலனாய்வு பிரிவினர் மற்றும் பிரதிவாதிகள் சார்பாக ஆஜரான சட்டத்தரணிகளின் விண்ணப்பங்களை ஆராய்ந்த நீதிவான் முன்னாள் கணக்காளர் உட்பட 04 சந்தேக நபர்களையும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

மேலும் கல்முனை மாநகர சபையின் நிதி மோசடி விவகாரம் தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவினரால் விசாரணைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு அண்மைக்காலமாக நால்வர் கைதாகி இருந்தனர்.

இதில் ஒருவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார். ஏனைய மூன்று சந்தேக நபர்களும் விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். இந்நிலையில் நேற்று முன் தினம் திருகோணமலையில் வைத்து முன்னாள் கணக்காளர் மருதமுனை -5 பகுதியை சேர்ந்த ஏ.எச்.முகமது தஸ்தீக் (வயது-47) கைதானார்.

இவ்வாறு திருகோணமலையில் வைத்து கைது செய்யப்பட்ட கல்முனை மாநகர சபையின் முன்னாள் கணக்காளர் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டு வாக்குமூலங்கள் பெறப்பட்ட பின்னர் கல்முனை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது நீதிவான் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

அத்துடன் கைதான முன்னாள் கணக்காளர் உள்ளிட்ட விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஏனைய சந்தேக நபர்களின் சேவைக்காலத்தில் வரியிருப்பாளர்கள் மேற்கொண்ட கொடுக்கல் வாங்கல் செயற்பாடுகளின்போது மேலும் மோசடி முறைகேடுகள் எவையும் மேலும் இடம்பெற்றுள்ளனவா என்பது தொடர்பிலும் இவற்றுடன் வேறு எவராவது சம்மந்தப்பட்டிருக்கின்றனரா என்பது குறித்தும் குற்றப்புலனாய்வு பிரிவினரால் தீவிரமாக ஆராயப்பட்டு வருகின்றன. (அ)

# இந்துமத எழுச்சியுடன் இன்று மண்டூர் திருத்தல யாத்திரை

காரைதீவு, ஓக. 26

காரைதீவில் இருந்து மண்டூர் முருகன் ஆலயத்திற்கான திருத்தல பாதயாத்திரை இந்து மத எழுச்சியுடன் இன்று சனிக்கிழமை காலை சிறப்பாக நடைபெற உள்ளது.

காரைதீவு அடியார்களுடன் அட்டப்பள்ளம், திராய்க்கேணி, வீரமுனை ஆகிய கிராம மக்களும் கலந்து கொள்வது வழக்கம்.

முருகப்பெருமான் திருவுருவப் படங்கள் தாங்கிய அலங்கரிக்க பட்ட ஏழு உழவு இயந்திரங்கள் முன்னதாக செல்ல, அடியார்கள் “அரோகரா” கோசம் விண்ணைப்பிளக்க, நந்திக் கொடி தாங்கி, பஜனைப் பாடல்கள் சகிதம் பாதயாத்திரை சுமார் மூன்று கிலோ மீட்டர் தூரம் அடியார்கள் வரிசையில் செல்வது வழமை.

இன்று அதிகாலை நான்கு மணியளவில் மாவடி கந்த சுவாமி ஆலயத்தில் இருந்து புறப்படும் பாதயாத்திரை ஐந்து மணியளவில் கண்ணகை அம்மன் ஆலயத்தை அடைந்து அங்கிருந்து கல்முனை தரவைப் பிள்ளையார் ஆலயம், சிறீ முருகன் ஆலயத்தை அடைந்து நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, கிட்டங்கி, சவளக்கடை ,நாவிதன்வெளி, வேப்பயடி, தம்பலவத்தை சென்று மண்டூர் ஆலயத்தை சென்றடையும். (அ)

# சிங்கப்பூர் ஜனாதிபதி தேர்தல் வெற்றியின் விளிம்பில் தமிழர்!

## தர்மன் சண்முகரத்னம் முன்னிலையில்

**சிங்கப்பூர்சிற்றி, ஒக. 26**

**சிங்கப்பூரின் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் வம்சாவளியை சேர்ந்த தர்மன் சண்முகரத்னம் போட்டியிடுகின்றார்.**

**சிங்கப்பூரின் தற்போதைய ஜனாதிபதி ஹலிமாவின் 6 ஆண்டு பதவிக் காலம் அடுத்த மாதம் 13 ஆம் திகதியுடன் நிறைவடைகிறது.**



இதைத் தொடர்ந்து ஜனாதிபதித் தேர்தலுக்கு தமிழ் வம்சாவளியை சேர்ந்த தர்மன் சண்முகரத்னம், சிங்கப்பூர் அரசாங்க முதலீட்டு நிறுவனத்தின் முன்னாள் முதலீட்டுத் தலைவர் இங் கொக் சொங் மற்றும் என்டியுசி இன்கம் நிறுவனத்தின் முன்னாள் தலைமை நிர்வாகி டான் கின் லியான் ஆகியோர் வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர்.

இந்நிலையில் சிங்கப்பூர் அரசியல் நிலவரங்களின்படி, தர்மன் சண்முகரத்னம் முன்னிலையில் உள்ளார்.

**யார் தர்மன் சண்முகரத்னம் ?**

இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட தமிழ் வம்சாவளியை சேர்ந்தவரே தர்மன் சண்முகரத்னம். ஜப்பானியரான ஜேன் யுமிக்கோ இட்டோகியைத் திருமணம் செய்தார். இவர்களுக்கு மூன்று மகன்களும் ஒரு மகளும் உள்ளனர்.

லண்டன் ஸ்கூல் ஒவ் எக்கனமிக் பல்கலைக்கழகத்தில் பொருளியல் பட்டப்படிப்பை மேற்கொண்டார். பின்னர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பொருளியல் முதுநிலைப் பட்டம் பெற்றார். தொடர்ந்து ஹவார்ட் பல்கலைக்கழகத்தில் பொது நிர்வாகத் துறையில் முதுநிலைப் பட்டக் கல்வியை மேற்கொண்டார்.

**அரசியல் நகர்வு**

2001ஆம் ஆண்டு ஜூரோங் குழுத்தொகுதி பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 2019ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து மூத்த அமைச்சராகச் சேவையாற்றினார். தொடர்ந்து சமுதாயக் கொள்கைகளுக்கான ஒருங்கிணைப்பு அமைச்சராகவும், சிங்கப்பூர் நாணய வாரியத்தின் தலைவராக இருந்தார்.

பிரதமருக்குப் பொருளியல் கொள்கைகள் குறித்து ஆலோசனை வழங்கினார். பல ஆண்டுகள் துணைப்பிரதமர், நிதியமைச்சர், கல்வியமைச்சர் ஆகிய பொறுப்புகளில் சேவையாற்றினார்.

தற்போது சிங்கப்பூர், இந்தியர் மேம்பாட்டுச் சங்கத்தின் அறங்காவலர் வாரிய தலைவராகவும் பதவி வகிக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிங்கப்பூர் ஜனாதிபதி தேர்தலில் மும்முனை போட்டி நிலவும் சூழலில் தமிழ் வம்சாவளியை சேர்ந்த தர்மன் சண்முகரத்னம் முன்னிலையில் இருக்கிறார்.

சிங்கப்பூரின் ஆளும் கட்சியான மக்கள் செயல் கட்சியின் ஆதரவு பெற்றவர் என்பதால் சிங்கப்பூரின் அடுத்த ஜனாதிபதியாக தர்மன் சண்முகரத்னம் தேர்வு செய்யப்படுவார் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# பாடசாலை விடுமுறை நாள் குறைவடையும் சாத்தியம்!

## பிரான்ஸ் ஜனாதிபதி அறிவிப்பு



*பாரிஸ், ஒக. 26*

பாடசாலை விடுமுறை நாட்களை குறைப்பதற்கு விரும்புவதாக பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் தெரிவித்தார்.

இந்த அறிவிப்பானது ஆசிரியர் சங்கங்கள் மற்றும் பெற்றோர்களிடையே விவாதத்தை தோற்றுவித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கோடைக்கால விடுமுறையின் பின்னர் நாடு திரும்பிய பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் லீ பொயிண்ட் இதழுக்கு வழங்கிய செவ்வியிலேயே இந்த விடயத்தை தெரிவித்தார்.

கல்வி நடவடிக்கையில் பின்தங்கியிருப்பதாக மதிப்பிடப்பட்ட மாணவர்கள் செப்ரெம்பர் மாதம் பாடசாலை கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு பதிலாக ஒகஸ்ட் மாதம் நடுப்பகுதியில் பாடசாலைகளுக்கு சமூகமளிக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டார்.

பரீட்சை நடைபெறாத நிலையில் பெரும்பாலும் ஜூன் மாதம் நிறைவு செய்வதற்கு அனுமதிக்கப்படும் கல்வி நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டுமெனவும் பிரான்ஸ் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

இதனிடையே, ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் பிரான்ஸில் ஆண்டு ஒன்றுக்கான பாடசாலை விடுமுறையானது இரண்டு வாரங்கள் அதிகமாக காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இருப்பினும் இத்தாலி போன்ற ஐரோப்பிய நாடுகளில் கோடைகால விடுமுறை அதிகமாக வழங்கப்படுவதாகவும் சர்வதேச ஊடகங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இந்த நிலையில், ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் பாடசாலை விடுமுறை நாட்களை மீள் பரிசீலனை செய்ய விரும்பினால், அது கோடைகால விடுமுறை மாத்திரமன்றி ஆண்டு முழுவதுமான விடுமுறை நாட்களை கவனத்தில் கொண்டதாக இருக்க வேண்டுமென ஆசிரியர் தொழிற்சங்க பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், பிரான்ஸ் ஜனாதிபதி வெளியிட்ட கருத்தானது காலநிலை யதார்த்தம் தொடர்பில் கவனம் செலுத்தாதுள்ளதாக ஆசிரியர் தொழிற்சங்க பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(அ)

# ஐரோப்பிய ஒன்றியத்துக்குத் தடை விதிக்கும் முத்திரை வடஅயர்லாந்து உணவுப்பொதிகளில்

*பிரஸ்ஸல்ஸ், ஒக. 26*

வடக்கு அயர்லாந்தில், சில உணவுகளின் பொதிகளில் ‘ஐரோப்பிய ஒன்றியத்துக்காக அல்ல’ என்ற முத்திரை ஒட்டப்பட்டுள்ளது.

அதன்படி, ஆஸ்டா பல்பொருள் அங்காடி முதன்முதலாக இதனை அமுல்படுத்தியுள்ளது.

எதிர்வரும் 2024ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் தொடக்கம் இப்படியான ஒரு வழிமுறை பிரித்தானியா முழுவதுமே நடைமுறைக்கு வரவுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது வட அயர்லாந்துக்கான பிரெக்சிட் 2019 ஒப்பந்தங்களில் செய்யப்படும் பெரும் மாற்றங்களில் ஒன்று எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பிரெக்சிட்டைத் தொடர்ந்து, பிரித்தானிய பொருட்களை ஐரோப்பிய ஒன்றியத்துக்குள் கொண்டு செல்வதற்கு கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், வட அயர்லாந்துக்கு அனுப்பப்படும் இறைச்சி, பால் போன்ற பொருட்களில், ‘ஐரோப்பிய ஒன்றியத்துக்காக அல்ல’ என்ற முத்திரை ஒட்டப்படவுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி




வெளியிட்டுள்ளன.

ஆவண சரிபார்ப்பு முதலான விடயங்களுக்காக, தேவையற்ற கால தாமதம் தவிர்க்கப்படும் என்பதால், இந்த நடைமுறை அமுல்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், எதிர்வரும் 2025ஆம் ஆண்டிலிருந்து, வட அயர்லாந்துக்கு அனுப்பப்படும் மற்ற பொருட்களின் மீதும் இந்த முத்திரை ஒட்டப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒரு பகுதியாக இருந்த பிரித்தானியா, பின்னர், பொருளாதாரம், புலம்பெயர்தல், ஐரோப்பிய ஒன்றியத்துடனான உறவு என பல்வேறு காரணங்களால் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறுவதாக தீர்மானித்தது.

அவ்வாறு ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியா வெளியேறியதையே பிரெக்சிட் என தெரிவிக்கின்றனர்.

(அ)

# ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்துவரும் செவ்வாய் கிரகத்தின் சுழற்சி வேகம்!

*நியூயோர்க், ஒக. 26*

சிவப்பு கிரகம் என அழைக்கப்படும் செவ்வாய் கிரகம் அதன் அச்சில் சூழலும் வேகம் என்பது தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இதற்கான காரணம் என்ன என்பது குறித்து உறுதியான தகவல் எதையும் விஞ்ஞானிகளால் இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை.

செவ்வாய் கிரகத்தை ஆய்வு செய்வதற்காக அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா இன்சைட் லாண்டரை அனுப்பியிருந்தது.

இந்த லேண்டர் கடந்த 2018ஆம் ஆண்டு செவ்வாய் கிரகத்தை சென்றடைந்து ஆய்வை தொடங்கியது.

எரிபொருள் தீர்ந்ததால் இந்த திட்டம் முடிவுக்கு வந்தது. எனினும், இன்சைட் லாண்டர் சேகரித்த தரவை நாசா நிபுணர்கள் பகுப்பாய்வு செய்து வருகின்றனர்.

இந்த பகுப்பாய்வில், வேகமாக சுழல்வதன் காரணமாக செவ்வாய் கிரகத்தில் ஒரு நாளின் நீளம் என்பது ஒவ்வொரு ஆண்டும் ஒரு மில்லி விநாடி அளவு குறைந்து வருவதை அவர்கள் கண்டறிந்தனர்.

சுழற்சி வேகம் அதிகரித்து வருவதற்கு என்ன காரணம் என்பதை நிபுணர் குழுவினரால் கண்டறிய முடியவில்லை. இதற்கு பதிலாக ஒரு கோட்பாடு அவர்



களால் முன்வைக்கப்படுகிறது.

செவ்வாய் கிரகத்தின் நிறை, அதன் மேற்பரப்பில் என்ன நடக்கிறது என்பன உள்ளிட்ட கிரகத்தில் மெல்ல மெல்ல ஏற்பட்டு வரும் மாற்றத்தை சுழற்சி வேகம் அதிகரிப்பதற்கான காரணமாக அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

பனிக்கட்டிகள் நிறைந்த துருவப்பகுதிகளில் பனிக்கட்டி படிவதாலும், பனிக்கட்டி புதைவால் நிலப்பரப்பு உயர்ந்து வருவதாலும் இது நிகழ்ந்திருக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர்.

இன்சைட் தொகுதியால் பதிவுசெய்யப்பட்டதைப் போல துல்லியமான அளவீடு எதுவும் இல்லை என்பதால் சுழற்சி மாற்றங்களை இதுவரை கண்டறிய முடியாமல் இருந்தது.

“இவ்வளவு துல்லியத்துடன் சமீபத்திய அளவீட்டை பெறுவது மிகவும் அருமையாக உள்ளது ” என்று இன்சைட்டின் முதன்மை ஆய்வாளரான புரூஸ் பேனர்ட் கூறுகிறார்.

“செவ்வாய் கிரகத்துக்கான இன்சைட் போன்ற புவி இயற்பியல் நிலையத்தைப் பெறுவதற்கான முயற்சிகளில் நான் நீண்ட காலமாக ஈடுபட்டு வருகிறேன். தற்போது தெரியவந்துள்ளவை போன்ற முடிவுகள் பல ஆண்டுகளின் உழைப்பை பயனுள்ளதாக்குகின்றன.” என்றும் குறிப்பிடுகிறார்.

(அ)

# சந்திரமண்டலத்தை பாரதம் தொடும்போது நாமோ தொல்பொருள்களைத் தேடுகிறோம்

## கூறுகிறார் மனோ கணேசன்

**கொழும்பு, ஓக. 26**

**வானத்தில் ஏறி சந்திர மண்டல வாசலை பாரதம் தொடும் போது, நாம் தரைக்கு கீழே தொல்பொருளை தேடுகிறோம் என்ற உண்மையை உணர்ந்து வருந்துகிறேன் என தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சந்திரனில் தடம் பதித்த நான்காம் நாடாகவும், நிலவின் தென்முனையில் விண்கலத்தை இறக்கிய முதலாவது நாடாகவும் பாரதம் சரித்திரம் படைத்துள்ளது. இந்திய மக்களுக்கும், அரசுக்கும், குறிப்பாக இந்திய இஸ்ரோ நிறுவனத்தின் "மூன்-ப்ராஜெக்ட்" வேலைத்திட்ட பணிப்பாளர் வீரமுத்துவேல் தலைமையிலான விஞ்ஞான தொழிட்நுட்ப அணிக்கும் மனமார்ந்த வாழ்த்துக்கள்.



இந்த சாதனையை எண்ணி, தென்னாசிய நாட்டவராகவும், இந்திய வம்சாவளி தமிழராகவும் பெருமையடைகிறேன்.

பாரதம் தந்த 13 ஆவது திருத்த மாகாணசபையும் இன்று குருந்தூர் மலையில் ஏறி விழுந்து நிற்கிறது. அது காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம் என்று இழுபறி படுகிறது. சரித்திரத்தில் இருந்து பாடம் படிப்பதற்கு பதிலாக, எல்லா பிரச்னைகளுக்கும் சரித்திரத்துக்குள் நுழைந்து பதில் தேடும் தோற்றுப்போன நாட்டவராக நாம் இன்று இருக்கிறோம்.

தொல்பொருள் அகழாய்வு பிரதேசம், மதங்களுக்கும், மத நிகழ்வுகளுக்கும் இடம் தராத பாதுகாக்கபட்ட பிரதேசமாக இருக்க வேண்டும். அது தொடர்பான எல்லா வரலாறு உண்மைகளையும் ஆவணப்படுத்தி ஆர்வலர்களுக்கு எடுத்து கூறும் அரச நிறுவனமாக இருக்க வேண்டும் என்ற முற்போக்கான சிந்தனையறிவு எமக்கு இல்லை. ஆகவே, ஒருநாள், மாலைத்தீவும் இப்படி "மூன்-ரொக்கட்" அனுப்பும் வரை நாம் இப்படி தொல்பொருளாராட்சியில் தேடி மோதிக் கொண்டே இருப்போம்-என்றார்.

(அ)

# சரத் வீரசேகரவை கைது செய்ய வலியுறுத்தி யாழில் போராட்டம்



*யாழ்ப்பாணம், ஓக. 26*

நீதித்துறையின் சுதந்திரத்தில் தலையீடு செய்து நீதிபதிக்கு அச்சறுத்தல் விடுக்கும் சரத் வீரசேகரவை உடனடியாக கைது செய்யுமாறு வலியுறுத்தி, அடக்கு முறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பின் தலைவர் மு.தம்பிராசா யாழ். நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு முன்பாக அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

நீதிதுறையின் சுதந்திரத்திக்கு அச்சுறுத்தல் விடுக்கும் சரத் வீரசேகர உள்ளிட்ட எனையவர்களையும் கைது செய், இனக்கலவரத்திற்கு ஏதுவாக கஜேந்திர குமார் பொன்னம்பலத்தின் வீட்டை முற்றுகையிட முனையும் அனைவரையும் உடனடியாக கைது செய்து நீதியின் முன் நிறுத்து உள்ளிட்ட கோஷங்கள் அடங்கிய பதாதைகளை காட்சிப்படுத்தி அவர் போராட்டத்தில் ஈடுபட்டார்.

(அ)

# ஒன்லைன் ஊடாக மீன்கள் விற்பனை

*கொழும்பு, ஓக. 26*

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் மீன்களை இணையத்தளத்தின் ஊடாக வீடுகளுக்கே பெற்றுக் கொள்ள முடியும் என கடற்றொழில் இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

மீன்பிடி கூட்டுத்தாபனங்கள் தற்போதைய சந்தைமுறைக்கு ஏற்றவாறு நவீனமயமாக்கல் அடைந்து, உணவு மற்றும் பொருட்கள் விநியோக சேவைகள் மூலம் நுகர்வோர் மீன்களை தங்கள் வீடுகளுக்கு கொண்டு செல்வதற்கான வசதிகளை ஏற்படுத்தி இருப்பதாக கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வா தெரிவித்தார்.

நாரஹேன்பிட்டி பொருளாதார நிலைய வளாகத்தில் அமைந்துள்ள எச் 18 என்ற பெயரிடப்பட்ட கடற்றொழிலாளர் கூட்டுத்தாபனத்தின் கடையொன்றை மீளத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

இதன்படி, முதற்கட்டமாக கொழும்பு மற்றும் புறநகர் பகுதி மக்களுக்கு இந்த வசதி வழங்கப்படவுள்ளது. கடற்றொழில் அமைச்சும் கடற்றொழில் கூட்டுத்தாபனமும் பல்வேறு சவால்களை எதிர்கொண்டுள்ள போதிலும் தொலைநோக்கு சிந்தனையுடன் முன்னோக்கிச் செல்ல முயற்சிப்பதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# மரண அறிவித்தல்



திருமதி

**அம்பிகாபதி நல்லதம்பி**

**(மாலாம்மா)**

**தோற்றம்**
**07.10.1943**

**மறைவு**
**22.08.2023**

ஆறுகால்மடம், புதுவீதியை பிறப்பிடமாகவும் பிரான்ஸ்,
எலன்கோட் (Élancourt 78990 ) நகரை வதிவிடமாகவும் கொண்டிருந்த
**திருமதி அம்பிகாபதி நல்லதம்பி**
கடந்த 22.08.2023 செவ்வாய்கிழமை காலமானார்
அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - சின்னம்மா
தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான
பொன்னம்பலம் - மாரிமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும்
காலஞ்சென்ற முன்னாள் இ.போ.ச.திடீர் பரிசோதனைக் குழுத் தலைவர்
நல்லதம்பி அவர்களின் அன்பு மனைவியும்
பவானந், சிவானந், லீனா,ஜெயமாலா ஆகியோரின் அன்புத் தாயாரும்
பகீரதன், கண்ணதாசன், உமாகாந்தி (சுமணா),
இறைஞ்சனி ஆகியோரின் அன்பு மாமியாரும்
பீரவீனா, கீர்த்தனா, பிரசன்னா, மிதுனன், காலஞ்சென்ற
நவீனா, மற்றும் ஜெனன் ஆகியோரின் அன்பு அம்மம்மாவும்
பாஸ்கர், அனோயன், அஞ்சலி, சுபாங்கி, பவுர்ணியா, பரத்ராஜ்
ஆகியோரின் அன்பு அப்பம்மாவும்
சகான், குளோவி, ஒலிவியா, நிலான் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியையும் தகனமும் 28.08.2023 திங்களன்று நடைபெறும்.
இறுதிக்கிரியை : திங்கட்கிழமை காலை 9.00 மணி முதல் 12 மணி வரை
**Hôpital public André Mignot**
**177 Rue de Versailles, 78150 Le Chesnay, France**
தகனம் : 28.08.2023 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு
**Espace funéraire et Crématorium des Yvelines,**
**52 Rue De La Nouvelle France 78130 Mureaux, France**
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு: 00 49 176 407 94 145 (ஜெர்மனி)**
**கண்ணதாசன் (கண்ணன்): 065028635 (பிரான்ஸ்)**

# நீதிமன்றத்தின் செயல்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்படுத்துவதை தவிருங்கள்

## நீதி அமைச்சர் கோரிக்கை

கொழும்பு, ஓக. 26

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரம் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளது. ஆகவே, நீதிமன்ற செயல் பாடுகளுக்கு பாதிப்பு ஏற்படும் வகை யில் செயல்படுவதை அனைவரும் தவிர்த் துக் கொள்ள வேண்டும் என நீதி, சிறைச் சாலைகள் அலுவல்கள் மற்றும் அரச மைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜய தாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக் கிழமை இடம்பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரை யாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப் பிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மன்னப்பெரும தலைமையிலான சுற்றா டல் தொடர்பான பாராளுமன்ற துறை சார் மேற்பார்வைக் குழு கடந்த ஜூலை 21 ஆம் திகதி நாட்டின் கடற்பரப்பில் தீ விபத்துக்கு உள்ளான எம்.வி. எக்ஸ்பி ரஸ் பேர்ள் கப்பல் மற்றும் நியூ டைமன் கப்பல் குறித்து பாராளுமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை தொடர்பில் சட்டமா அதிபர் திணைக் களத்தின் செயற்பாடுகள் மற்றும் அதிகாரங்களை கேள்விக்குள்ளாக்கும் வகையில் ஒருசில ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. சுற்றாடல் தொடர் பான பாராளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுவில் தலைவர் உட் பட 12 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கி றார்கள்.

சுற்றாடல் துறைசார் தொடர்பான துறைசார் மேற்பார்வை குழு சமர்ப்பித்துள்ள அறிக்கையில் குழுவின் தலைவர் அஜித் மன்னப்பெரும உள்ளிட்ட ஆறு பேர் கைச்சாத்திட்டுள்ளார்கள். ஏனைய உறுப்பினர்கள் கைச்சாத்திடவில்லை. ஆகவே அறிக்கை குறித்து குழுவின் நிலைப்பாடு என்ன, சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையை அவர்கள் ஏற்கவில்லையா ? என்ற கேள்விகள் எழுந்துள்ளன.

இந்த அறிக்கையில் சட்டமாதிபர் திணைக்களத்தின் செயல்பாடுகள் மற்றும் அதிகாரங்களை கேள்விக்கு உள்ளாக்கும் வகையில் ஒருசில விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. நாட்டின் கடற்பரப்பில் தீ விபத்துக்கு உள்ளாகிய எம். வி. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பான வழக்கு சிங்கப்பூர் வணிக மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள நிலையில் வழக்கு விசாரணைக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் செயல்படுவதை அனைவரும் தவிர்த்துக் கொள்ள வேண்டும் - என்றார். (ஐ)

## இந்திய...

இணைத்து அவர் அனுப்பி வைத் துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

“இந்தியாவுக்கும் இலங்கைத் தமிழ ருக்கும் இடையே நல்லிணக்கம் மீண் டும் அமைய வேண்டும் என்பதற்காக (1989-90 ஆண்டு காலப்பகுதியில் குழம்பிய நல்லிணக்கம்) 1990 நவம்பர் முதலாம் நாள் தொடக்கம் கவிஞர் காசி ஆனந்தனும் நானும் பல்வேறு சந்திப்பு களை மேற்கொண்டோம்.

“இதை அறிந்த ராஜீவ் காந்தியின் உதவியாளர்கள் தம்மை சந்திக்க வரு மாறு அழைத்தார்கள். 1991 மார்ச் ஐந் தாம் நாள் நானும் கவிஞர் காசி ஆனந்த னும் டில்லி சென்றோம் - ராஜீவ் காந்தி வீட்டுக்குச் சென்றோம். விடுதலைப் புலிகளுக்கும் ராஜீவ் காந்திக்குமான மிக இரகசியமான சந்திப்பு நடந்தது.

கசப்பு நிகழ்வுகளை மறக்குமாறும் பிரபாகரனுக்கு எல்லா உதவிகளையும் தாம் செய்வதாகவும் காசி ஆனந்தனிடம் ராஜீவ் காந்தி கூறினார். “விடுதலைப் புலிகளிடம் இந்த செய்தியை தெரிவித் தோம். 1992 மே 21ஆம் நாள் ராஜீவ் காந்தியைக் கொலையாளிகள் கொன்ற னர். எமது சந்திப்பு விடுதலைப் புலிக ளின் கொலைத் திட்டத்துக்கு முன்னோ டியான போலிச் சந்திப்பு என அக்காலத் தில் பலர் எழுதினர்.

சென்னையில் - மல்லிகையில் மத்திய அரசின் விசாரணை குழு முன்பாக காசி ஆனந்தனும் நானும் பல பகல்கள் - பல இரவுகள் எனச் சென்று வந்தோம். “சந் திப்புக்கும் கொலைக்கும் தொடர் பில்லை என அப்பொழுது எங்களை விட்டு விட்டார்கள். இந்தச் சந்திப்புக் கும் கொலைக்கும் தொடர்பு உண்டு என 1999இல் ஆணைக்குழு முன் பலர் சாட்சியம் அளித்தனர்.

2000 ஏப்ரல் ஐந்தாம் நாள் என் வீட் டையும் பணிமனையையும் ஒரே நேரத் தில் விசாரணை குழுவினர் 9 மணி நேரம் தங்கிச் சோதனையிட்டு பல ஆவணங் களைக் கைப்பற்றிச் சென்றனர். “அனைத் தையும் பயங்கரவாதத் தடைச் சட்டம் (தடா) நீதிமன்றத்தில் ஒப்படைத்தனர்.

அந்த ஆவணங்களுள் எனது கடவுச் சீட்டுகளும் அடங்கும். 2000ஆம் ஆண்டு முதல் வெளிநாடு செல்வதற்காக (தடா) நீதிமன்றத்தில் கடவுச்சீட்டுகளை கேட்டு விண்ணப்பித்து வருகிறேன்.

இதுவரை 17 முறை விண்ணப்பித்து கடவுச்சீட்டுகளைப் பெற்று வெளிநாடு சென்று திரும்பியுள்ளேன். ஒவ்வொரு முறை விண்ணப்பிக்கும் போதும், “கட வுச் சீட்டுகளைக் கொடுக்க வேண்டாம்“ எனக் கூறுவர். இதற்காக, விடுதலைப் புலிகளின் மத்திய குழு உறுப்பினர் காசி ஆனந்தனின் நண்பர், ராஜீவ் காந்தி கொல்லப்படுவதற்கு முன்னர் காசி ஆனந்தனுடன் இணைந்து புதுடில்லிக்கு சென்று அவரை சந்தித்தவர் என்பன உள்ளிட்ட 12 காரணங்களை தடா நீதி மன்றத்தில் சுட்டிக்காட்டுவர்.

எனினும், அவர்களின் எதிர்ப்பை மீறி (தடா) நீதிபதிகள் தொடர்ச்சியாக எனது விண்ணப்பத்தை ஏற்று கடவுச் சீட்டு களை எனக்குத் தருவர். இவ்வாறு 17 முறை தீர்ப்புகள் வழங்கியுள்ளனர் என் றும் தெரிவித்தார் - என்றுள்ளது. (ஐ)

## சீனாவின்...

கரிசனையை வெளியிட்டிருந்தது. இந்த நிலையில், ஷி யான் 6 கப்பல் இலங்கை வருவது குறித்தும் தனது கவலைகளை வெளியிட்டது.

எனினும், சீனாவின் கப்பலுக்கு அனு மதி வழங்கப்படுவது குறித்து இன்னமும் தீர்மானம் எடுக்கவில்லை என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு குறிப் பிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## 14ஆவது...

இலங்கை, இந்தியாவில் போதைப் பொருள், ஆயுத கடத்தல் மற்றும் விற்ப னையுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரின் பினாமியாக செயல்பட் டவர் என்று இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவர் இந்தியாவில் தங்கியிருப்பதற் காக போலியான ஆவணங்களை தயா ரித்து வைத்திருந்தார் என்றும் தெரி விக்கப்பட்டது.

இந்த வழக்கில் கைதானவர்கள் அனைவரும் போதைப் பொருளை கடத்தி சம்பாதித்த பணம் மூலமாக விடுதலைப் புலிகள் அமைப்பை மீள உருவாக்குவதற்காக ஆயுதங்களை குவிக் கவும் நிதி மூலத்தை உருவாக்கவும் முனைந்தனர் என்று இந்திய அதிகாரிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (ஐ)

# பிரமிட்ட திட்டங்களை நம்பி ஏமாற வேண்டாம்

கொழும்பு, ஓக. 26

பிரமிட் திட்டங்களால் அவற்றின் சட்டபூர்வத்தன்மையை நிரூபிக்கும் நோக்கில் வெளியிடப்படும் கூற்றுக்க ளில் எவ்வித உண்மையும் இல்லை. எனவே அவற்றை நம்பி ஏமாறவேண் டாம் என்று பொதுமக்களிடம் இலங்கை மத்திய வங்கி கேட்டுள்ளது.

இணையத்தளங்கள் ஊடாகத் தொழிற்படுகின்ற சில பிரமிட் திட்டங் கள், அவை சட்டபூர்வமான திட்டங்கள் என்பதை நியாயப்படுத்தும் வகையில் சில விடயங்களைக்கூறி, எனவே இத்திட் டங்களில் பணத்தை முதலீடு செய்யு மாறு பொதுமக்களைத் தவறாக வழி நடத்துவதாகத் தமக்குப் பல முறைப் பாடுகள் கிடைக்கப்பெற்றிருக்கின்றன என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

“இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குவிதிகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் இத்திட்டம் முதலீட்டாளர்களின் நிதியங்களைப் பாதுகாக்கின்றது, இத்திட்டம் உரிய வரிகளை அரசுக்குச் செலுத்துகின்றது, நிதியங்களை மீளப் பெறும் பொருட்டு இத்திட்டத்தில் பங்கேற்பவர்கள் தமது நிதியங்களிலி ருந்து தனிப்பட்ட வருமான வரியை இலங்கை மத்திய வங்கிக்குச் செலுத்த வேண்டும். அன்றேல் அவர்களது நிதியங்கள் மத்திய வங்கியினால் முடக்கப்படும், இத்திட்டம் இலங்கை மத்திய வங்கியுடன் கலந்துரையாடல் களை முன்னெடுத்திருந்தது“ என்பன போன்ற விடயங்களே தமது திட்டத்தை நியாயப்படுத்துவதற்காக சில பிரமிட் திட்ட ஏற்பாட்டாளர்களால் கூறப்படுவ தாக மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

இருப்பினும் இவ்வாறான கூற்றுக்க ளைத் தாம் முற்றாக நிராகரிப்பதாகவும், இக்கூற்றுக்களில் எவ்வித உண்மையும் இல்லை என்றும் மத்திய வங்கி அறிவித் துள்ளது. அதுமாத்திரமன்றி இத்தகைய திட்டங்கள் தொடர்பில் மிகுந்த அவதா னத்துடனும் விழிப்புடனும் செயற்படு மாறு பொதுமக்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

மேலும் இத்திட்டங்களில் முதலீடு செய்வதனூடாக பொதுமக்கள் அரும் பாடுபட்டு உழைத்த பணத்தை இழக்கக் கூடும் என்பதனால், இவ்வாறான திட்டங்களில் முதலீடு செய்யவேண் டாம் என்றும் மத்திய வங்கி வலியு றுத்தியுள்ளது.

இலங்கை மத்திய வங்கியினால் உரி மம் அளிக்கப்பட்டு, ஒழுங்குமுறைப் படுத்தப்படும் நிறுவனங்களின் விபரங் களை மத்திய வங்கியின் உத்தியோக பூர்வ வலைத்தளத்திலும், வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் வலைத் தளத்திலும் பார்வையிடமுடியும். (ஐ)

# விடைத்தாள் திருத்தும் ஆசிரியர்களுக்கு விடுமுறை

கொழும்பு, ஓக. 26

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தப் பணிகளில் ஈடுபட்ட அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு எதிர்வரும் 28ஆம் மற் றும் 29ஆம் திகதிகளில் விடுமுறை வழங்க கல்வி அமைச்சு அனுமதியளித்துள்ளது.

பரீட்சைகள் திணைக்களம் இந்த அறி வித்தலை விடுத்துள்ளது.

கடந்த, 18 ஆம் திகதி ஆரம்பமான விடைத்தாள் திருத்தப்பணிகள் வரும் 27ஆம் திகதியுடன் நிறைவடையவுள் ளது. இந்த நிலையில், விடைத்தாள் திருத் தப்பணிகளில் நேரடியாக ஈடு பட்ட அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கு எதிர் வரும் 28ஆம் மற்றும் 29ஆம் திகதி களில் விடுமுறை வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

எனவே, குறித்த விடைத்தாள் திருத் தப்பணிகளில் ஈடுபட்ட அதிபர்கள் மற் றும் ஆசிரியர்கள் விடுமுறையை பெற் றுக்கொள்வதற்காக தங்களது வரவு பதி வேடுகளை கையளிக்குமாறு கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

## வடக்கு...

சங்கத்தினர் நீதிமன்ற நடவடிக்கை களைப் புறக்கணித்து தத்தமது நீதிமன் றங்களுக்கு முன்பாகப் போராட் டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது நீதித்துறை சுதந்திரமாக செயல்பட அனுமதிக்கப்படுவதுடன், நீதித்துறையில் கடமையாற்றுகின்ற நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள் சுதந்திரமாகச் செயல்பட இடமளிக்கப் பட வேண்டும் என்று சட்டத்தரணிகள் வலியுறுத்தினர்.

அத்துடன், “இனவாதம் பேசி நீதித்துறை சுதந்திரத்தை அழைக் காதே“, நீதித்துறையின் சுயாதீன செயல் பாட் டுக்குத் தடையேற்படுத்தாதே“, “தலை யிடாதே தலையிடாதே நீதித் துறையின் சுதந்திரத்தில் தலையிடாதே“, சுயாதீன நீதித்துறையின் செயல்பாட்டை உறுதி செய்யுங்கள்“, “பாராளுமன்ற சிறப்புரி மையை துஷ்பிரயோகம் செய்யாதே“, “நீதித்துறையின் சுதந்திரத் துக்குக் களங்கத்தை ஏற்படுத்தாதே“, “நீதித் துறை சுதந்திரம் ஓங்குக“, “கௌரவ நீதிபதிகளை அவமதிக்காதே“, “கௌரவ நீதிபதிகளின் கட்டளைக்கு மதிப்பளி“, “கௌரவ நீதிபதிகளின் கடமையில் தலையிடாதே“ உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பாதாதைகளைத் தாங்கியி ருந்தனர்.

கடந்த, 22ஆம் திகதி பாராளுமன் றத்தில் உரையாற்றிய சரத் வீரசேகர எம். பி. முல்லைத்தீவு நீதிபதிக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையிலும், நீதித்துறை சுதந்திரத்தை கேள்விக்குட்படுத்தும் வகையிலும் உரையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அதிகளவான...

குறிப்பாக, மதிய வேளையில் - 11 மணியிலிருந்து 2 மணி வரை அதிக வெப்பநிலை நீடிக்கிறது. இதனால், நோய்கள் ஏற்படும். நீரிழப்பு ஏற்படும். இதனைத் தடுப்பதற்கு போதியளவு நீராகாரம் அருந்த வேண்டும்.

சாதாரணமாக, வயது வந்தவர்கள் 2-3 லீற்றர் நீரை அருந்த வேண்டும். தற்போதுள்ள சூழ்நிலையில் இதனை விட அதிகளவு நீரை அருந்த வேண்டும். சிறுவர்கள் 2 - 3 லீற்றர் நீரை அருந்து வது அவசியம்.

மதிய வேளைகளில் பயணங்களை தவிர்ப்பதால் வெப்பங்களால் ஏற்படும் பாதிப்புகளை தவிர்க்கலாம். சிறுவர்கள் மதிய நேரங்களில் விளையாடுவதைத் தவிர்ப்பது நல்லது.

இந்த வெப்ப காலநிலை அடுத்த இரு வாரங்களுக்கு நீடிக்கலாம்.

இதேவேளை, போதிய தண்ணீர் சத்து நிறைந்த பழவகைகளை உட் கொள்ள வேண்டும். பழங்களை போதி யளவு சாப்பிடும்போது வெப்பத்தால் ஏற்படும் ஏற்படும் பாதிப்புகள் குறை வாக இருக்கும். இதேபோல உடல் வெப்பநிலையை குறைப்பதற்காக நீராடு தல் குறிப்பாக காலை அல்லது மாலை வேலைகளில் நீராடுவதன் மூலம் உடல் வெப்பத்தைக் குறைக்க முடியும். இத னால் வெப்பத்தால் ஏற்படக்கூடிய உடல் பாதிப்புகளையும் தவிர்க்கலாம்

வெப்ப சூழ்நிலையால் சுவாசத் தொற்று நோய் ஏற்படலாம். எனவே பொது இடங்களில் செல்லும்போது அவதானம் அவசியம். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# சரத் வீரசேகரவின் கருத்தை கண்டித்து முல்லை. சட்டத்தரணிகள் போராட்டம்!

## நீதிமன்ற நடவடிக்கைகளையும் புறக்கணித்தனர்







முல்லைத்தீவு, 26

**பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவின் கருத்தை கண்டித்து முல்லைத்தீவு மாவட்ட நீதி மன்றம் முன்பாக நீதிமன்ற நடவடிக்கைகளைப் புறக்கணித்து அடையாள கண்டனப் போராட்டம் ஒன்று சட்டத்தரணிகளால் நேற்று முன்னெடுக் கப்பட்டது.**

பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர கடந்த 22 ஆம் திகதி முல்லைத்தீவு நீதிபதி தொடர்பாக அவதூறு பரப்பும் வகையிலும், நீதித்துறை சுதந்திரத்தை கேள்விக் குட்படுத்தும் வகையில் பாராளுமன்றில் ஆற்றிய உரையை கண்டித்தும், எதிர்ப்புத் தெரிவித்தும் குறித்த கண்டன போராட்டம் நேற்றுக் காலை 9.30 மணி முதல் 10.30 மணிவரை நீதிமன்ற நடவடிக்கைகளை புறக்க ணித்து அடையாள கண்டனப் போராட்டம் இடம் பெற்றது.

இந்தப் போராட்டத்தில் கௌரவ நீதிபதிகளின் கடமையில் தலையிடாதே, சுயாதீனமான நீதித்துறை யின் செயற்பாட்டை உறுதி செய்யுங்கள், நீதித்துறை யின் சுதந்திரத்திற்கு களங்கத்தை ஏற்படுத்தாதே, பாராளுமன்ற சிறப்புரிமையை துஷ்பிரயோகம் செய் யாதே , கௌரவ நீதிபதிகளின் கட்டளைகளுக்கு மதிப் பளி போன்ற பல்வேறு வாசகங்கள் தாங்கிய பதாதை களை தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.(அ)

# பெருந்தொகை கஞ்சா நெடுந்தீவு கடலில் மீட்பு!

யாழ்ப்பாணம், ஓக. 26

27 மில்லியன் ரூபா பெறுமதியான கேரள கஞ்சா வடக்கு கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது.

நெடுந்தீவு கடற்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கண் காணிப்பு நடவடிக்கையின்போது, கடலில் மிதந்த பொதிகளில் கேரள கஞ்சா இருந்தமையை கண்டுபிடிக் கப்பட்டதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

22 பொதிகளில் அடைக்கப்பட்டிருந்த கேரளக் கஞ்சா தொகை 80 கிலோவுக்கும் அதிகம் என எடை மதிப்பி டப்பட்டுள்ளது. (அ)

# கஜேந்திரகுமார் எம்.பியின் வீட்டுக்கு பலத்த பாதுகாப்பு!




கொழும்பு, ஓக. 26

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செய லாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திர குமார் பொன்னம்பலத்தின் கொழும்பிலுள்ள வீட்டுக்கு முன்னால் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

பொலிஸார், கலகமடக்கும் பொலிஸார், அதிரடிப் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

குருந்தூர்மலை விவகாரம் தொடர்பில் நாடாளு மன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கொழும்பிலுள்ள வீட்டை சுற்றிவளைப்பதற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. கடும்போக்குடைய சிங்கள தேசியவாத அமைப்புகள் இதற்கான நடவடிக் கையில் இறங்கலாம் என சந்தேகிக்கப்பட்டது.

இந்நிலையிலேயே கஜேந்திரகுமார் எம்.பியின் வீட்டுக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (அ)

# வடக்கு அபிவிருத்தி திட்டங்களுக்கு சுவிஸ் அரசு முழுமையான ஆதரவு



யாழ்ப்பாணம், ஓக. 26

வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தித் திட்டங்க ளுக்கு சுவிஸ் அரசாங்கம் பூரண ஆதரவை வழங்கும் என இலங்கைக்கான சுவிஸ் தூதரகத்தின் முதல்நிலைச் செயலாளர் ஒலிவர் பிரஸ் தெரிவித்துள்ளார்.

மாகாணத்தின் தற்போதைய நிலைமைகள் குறித்து, ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸை சந்தித்து கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இக்கலந்துரையாடலில் பாடசாலை மாணவர்களின் கல்வி செயற்பாடுகள், விவசாய நடவடிக்கைகள் மற்றும் வடக்கு மக்களின் உட்கட்டமைப்பு வசதிகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

மேலும் வடக்கு மாகாணத்தில் தற்போது தாம் முன்னெடுத்துவரும் செயற்பாடுகள் குறித்து சுவிஸ் தூத ரகத்தின் முதல்நிலைச் செயலாளருக்கு ஆளுநர் பி.எஸ். எம். சார்ள்ஸ் விளக்கினார். (அ)

# மன்னார் சட்டத்தரணிகளும் நேற்று பணிப்புறக்கணிப்பு



மன்னார், ஓக. 26

மன்னார் மாவட்டத்தில் நேற்று சட்டத்தரணிகள், அடையாளப் பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுத்தனர். பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர அண்மையில் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதிக்கு எதிராக பாராளு மன்றத்தில் ஆற்றிய உரைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இப்பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது "எந்த பாராளுமன்ற உறுப்பினர்களும் தனது சிறப்புரிமையைப் பயன்படுத்தி நீதித்துறையை அவமதிக்கும் விதத்தில் அல்லது விமர்சிக்கும் விதத்தில் நடந்து கொள்ளக்கூடாது என்ற கோரிக்கையும் சட்டத்தரணிகளால் முன்வைக்கப்பட்டது.

இவ்வாறான அவதூறு ஏற்படுத்தும் கருத்துக்கள் இடம் பெற்றிருந்தால் அதனை ஹன்சாட்டில் இருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகளை சபாநாயகர் முன்னெடுக்கவேண்டும் எனவும் மன்னார் மாவட்ட சட்டத்தரணிகள் கோரிக்கை விடுத்தனர். (அ)

# யாழ். நீதிமன்று முன்பாகவும் சட்டத்தரணிகள் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஓக. 26

யாழ் மாவட்டத்தில் நேற்று சட்டத்தரணிகள் கண்ட னப் போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

கடந்த 22 ஆம் திகதியன்று முல்லைதீவு நீதிபதி தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர அவதூறு பரப்பும் வகையிலும் நீதித்துறை சுதந்திரத் தைக் கேள்விக்கு உட்படுத்தும் வகையிலும் பாராளு மன்றில் உரையாற்றியிருந்தார்.

இந்நிலையில் அவர் ஆற்றிய உரையைக் கண்டித்து முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கம் நேற்று காலை 9.30 மணி முதல் 10.30 மணி வரை நீதிமன்ற நடவடிக் கைகளை புறக்கணித்து, கண்டன போராட்டம் ஒன்றை நடத்த அழைப்பு விடுத்திருந்தது.

குறித்த போராட்டத்துக்கு ஆதரவளிக்கும் வகையில் யாழ். மாவட்ட சட்டத்தரணிகள் சங்கங்களும் தத்தமது நீதிமன்றங்களில் குறித்த அடையாள கண்டன போராட்டத்தை மேற்கொண்டன.

இதன் காரணமாக யாழ்ப்பாணத்தில் நீதிமன்ற செயற் பாடுகள் பாதிப்படைந்தன. (அ)





# குழந்தைகளிடம் கைபேசி வழங்குவதை தவிருங்கள்!

கொழும்பு, ஓக. 26

கையடக்க தொலைபேசி மற் றும் இணையம் ஆகியவற்றின் அதிக பயன்பாடு காரணமாக குழந்தைக ளுக்கு ஞாபக மறதி ஏற்படுவதற் கான சாத்தியம் உள்ளதாக மருத்து வர் ரூமி ரூபன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

குழந்தைகள் வெகுவாக இணை யக் காணொளியில் விளையாட்டு களுக்கு அடிமையாகின்றனர்

இணையக் காணொளி விளை யாட்டுப் போட்டிகளில் குழந்தை கள் தீவிரமாக அவதானம் செலுத்து வதால் மனநல நோய்க்கு உள்ளா கின்றனர். இதனால் பிள்ளைகள் கல்வியில் தோல்வியடைந்து பெற்றோரை எதிரிகளாக நோக்கு கின்றனர்.இதனால் குழந்தைகளின் எதிர்காலம் முற்றாக அழிந்துவிடும். எனவே குழந்தைகளுக்கு இயன்ற வரை கையடக்க தொலைபேசியை வழங்குவதை பெற்றோர் தவிர்த்துக் கொள்ளவேண்டும்-என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.08.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



# பிரபல மல்யுத்த வீரர் ப்ரே வியாட் மரணம்!

மியாமி, ஒக. 26

முன்னாள் டபிள்யூ. டபிள்யூ. ஈ. மல்யுத்த சம்பியன் ப்ரே வியாட் உடல்நலக்குறைவால் காலமானார். அவருக்கு வயது 36.

2009ஆம் ஆண்டு முதல் டபிள்யூ. டபிள்யூ. ஈ. மல்யுத்த போட்டிகளில் கலந்து கொண்டு விளையாடி வந்தவர் ப்ரே வியாட். மைக் ரோட்டுன்ரா என்ற இயற்பெயரைக் கொண்ட இவர், 2010 முதல் 2011 வரை ஹஸ்கி ஹாரிஸ் என்ற பெயரில் போட்டி களில் கலந்து கொண்டார். பின்னர் தனது பெயரை ப்ரே வியாட் என்று மாற்றினார். இதுவரை இரண்டு முறை சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

ரஸ்ல்மேனியா போட்டிகளில் கலந்து கொண்டு புகழ்பெற்ற டபிள்யூ. டபிள்யூ. ஈ. மல்யுத்த வீரர்களான தி அண்டர்ரேக்கர், ஜோன் சீனா, ரெண்டி ஒர்ட்ரன் ஆகியோரு டன் மோதியுள்ளார்.

கடந்த சில மாதங்களாக கடும் உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டு போட்டிகளில் கலந்து கொள்ளாமல் இருந்து வந்த ப்ரே வியாட் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை உயிரிழந்தார். இந்தத் தகவலை பிரபல முன் னாள் டபிள்யூ. டபிள்யூ. ஈ. மல்யுத்த வீரர் ட்ரிபிள் ஹெச் தனது ட்விட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

(ஐ)

---

உலக தடகள சம்பியன்ஷிப்

# கோலூன்றி பாய்தல் போட்டியில் தங்கம் வென்ற வீராங்கனைகள்



புடாபெஸ்ட், ஒக. 26

உலக தடகள சம்பியன்ஷிப்பில் மகளிருக்கான கோலூன்றி பாய்தல் போட்டியில் அவுஸ்திரேலியாவின் நினா கென்னடியும், ஒலிம்பிக் சம்பியனான அமெரிக் காவின் கேட்டி மூனும் தங்கப் பதக்கத்தை பகிர்ந்து கொண்டனர்.

ஹங்கேரி தலைநகர் புடாபெஸ்ட்டில் உலக தடகள சம்பியன்ஷிப் போட்டி நடைபெறுகிறது. இதில் மகளி ருக்கான கோலூன்றி பாய்தல் இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியாவின் நினா கென்னடியும் நடப்பு சம்பியனும் ஒலிம்பிக் சம்பியனுமான அமெரிக்காவின் கேட்டி மூனும் தலா 4.90 மீற்றர் உயரம் தாண்டி உலக சாதனை படைத்தனர்.

இருவரும் தலா ஒரு முறை இந்த அளவை தாண்டத் தவறினர். இதனால் வெற்றியாளரை தீர்மானிக்க நினா கென்னடி, கேட்டி மூனிடம் போட்டி அதிகாரிகள் பேச்சு நடத்தினர். இதன் பின்னர் இருவருமே சம்பியன் களாக அறிவிக்கப்பட்டனர். பின்லாந்தின் வில்மா முர்டோ 4.80 மீற்றர் உயரம் தாண்டி வெண்கலப் பதக் கம் வென்றார். (ஐ)

---

# ஜோன் இஸ்னர் ஓய்வு பெறுகிறார்!

நியூயோர்க், ஒக. 26

அமெரிக்க ஓப்பன் தொடருக்கு பின்னர் அமெரிக்க ரென்னிஸ் வீரர் ஜோன் இஸ்னர் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

இந்த ஆண்டுக்கான அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடர் நாளை மறுதினம் தொடங்கி அடுத்த மாதம் 10ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது. பல முன்னணி வீரர்கள், வீராங்கனைகள் இதில் பங்கேற்கின்றனர்.

இந்நிலையில் இந்த தொடருக்கு பிறகு ஓய்வு பெறுவதாக அமெரிக்க ரென்னிஸ் வீரர் ஜோன் இஸ்னர் அறிவித்துள்ளார். இஸ்னர் தனது ஓய்வு முடிவை சமூக வலைதளங்களில் அறிவித்துள்ளார்.

“ஏ. ரி. பி. தொடர்களில் 17 ஆண்டுகளுக்குப் பிறகு, ரென்னிஸிலிருந்து விடைபெறும் நேரம் இது. அமெ ரிக்க ஓப்பன் எனது இறுதி போட்டியாக இருக்கும். இந்த முடிவு எளிதானது அல்ல. ஆனால், எனது அற்புதமான குடும்பத்துடன் செலவழிக்க போகும் ஒவ்வொரு நொடியையும் நான் எதிர்நோக்குகிறேன். என்னுடைய பயணத்தில் எண்ணிலடங்கா போட்டிகள். என்னுடைய பயணம் இனிமையானது. இதில் எனக்கு உறுதுணையாக இருந்த அனைவருக்கும் நன்றி” என பதிவிட்டுள்ளார். (ஐ)



---



# டோனியின் சாதனையை தகர்த்த ஆப்கான் வீரர்!

அம்பாந்தோட்டை, ஒக. 26

பாகிஸ்தான் அணிக்கு எதிராக அதிக ஓட்டங்கள் குவித்த விக்கெட் காப்பாளர் என்ற சாதனையை இந்தியாவின் மகேந்திர சிங் டோனியிடம் இருந்து ஆப்கானிஸ்தானின் குர்பாஸ் தன்வசமாக்கினார்.

பாகிஸ்தான்- ஆப்கானிஸ்தான் அணிகள் இடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் நடந்தது.

இதில் ஆப்கானிஸ்தான் அணிக்கு தொடக்கம் கொடுத்த விக்கெட் காப்பாளர் ரமனுல்லா குர்பாஸ் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

குர்பாஸ் தனது 5ஆவது சதத்தை பூர்த்தி செய்தார். அத்துடன், இப்ராகிம் ஜட்ரனுடன் இணைந்து முதல் விக்கெட்டுக்கு 227 ஓட்டங்களை சேர்த்திருந்தனர். ஜட்ரன் 80 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த பின்னரும் தொடர்ந்து ஆடிய குர்பாஸ் 151 ஓட்டங்கள் (151 பந்து, 14 பௌண்ட்ரி, 3 சிக்ஸர்) விளாசியதோடு, பாகிஸ்தானுக்கு எதிராக அதிக ஓட்டங்களை குவித்த விக்கெட் காப்பாளர் என்ற சாதனையையும் படைத்தார்.

இதற்கு முன்பு இந்திய விக்கெட் காப்பாளர் டோனி 148 ஓட்டங்கள் (2005ஆம் ஆண்டு) எடுத்ததே இந்த வகையில் அதிகபட்சமாக இருந்தது. (ஐ)

---



# ஆப்கானுடனான போட்டி பாகிஸ்தான் த்ரில் வெற்றி!

அம்பாந்தோட்டை, ஒக. 26

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான 2ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணி ஒரு விக் கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் அணிகள் இடையி லான ஒரு நாள் கிரிக்கெட் தொடர் இலங்கையில் நடக்கிறது. இதில், அம்பாந்தோட்டையில் நேற்று முன்தினம் நடந்த போட்டியில்

நாணயச் சுழற்சியில் வென்ற ஆப்கானிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடியது.

தொடக்க ஆட்டக்காரர்களான ரமனுல்லா குர்பாஸ், இப்ராகிம் ஜட்ரன் ஆகியோர் வலுவான அத்திவாரத்தை இட்டனர். 39 ஓவர்கள் வரை இந்த கூட்டணியை அசைக்க முடியவில்லை. அபாரமாக ஆடிய குர்பாஸ் தனது 5ஆவது சதத்தை பூர்த்தி செய்தார்.

இவர்கள் முதல் விக்கெட்டுக்கு 227 ஓட்டங்கள் (39.5 ஓவர்) திரட்டி பிரிந்தனர். இப்ராகிம் ஜட்ரன் 80 ஓட்டங் களில் பிடியெடுப்பாகி ஆட்டமிழந்தார். ரமனுல்லா குர்பாஸ் 151 ஓட்டங்கள் (151 பந்து, 14 பௌண்ட்ரி 3 சிக்ஸர்) விளாசினார்.

கடைசி கட்டத்தில் முகமது நபி (29 ஓட்டங்கள்), அணித் தலைவர் ஷகிடி (15 ஓட்டங்கள்) ஆகியோர் எடுக்க ஆப்கானிஸ்தான் 5 விக்கெட்களை இழந்து 300 ஓட்டங்களை எட்டியது. இது பாகிஸ்தான் அணிக்கு எதிராக அந்த அணி பெற்ற அதிகூடிய ஓட்டமாகும்.

அடுத்து 301 ஓட்டங்கள் இலக்கை நோக்கி ஆடிய பாகிஸ்தான் அணியில் முதல்-3 வீரர்களான பஹர் ஷ மான் (30 ஓட்டங்கள்), இமாம் உல்-ஹக் (91 ஓட் டங்கள்), அணித் தலைவர் பாபர் அசாம் (53 ஓட்டங் கள்) கணிசமான பங்களிப்பை வழங்கினர்.

அவர்களுக்கு பிறகு நடுவரிசை வீரர்கள் தடுமாறிய போதும் ஷதப் கான் நம்பிக்கை தந்தார். கடைசி ஓவரில் வெற்றிக்கு 11 ஓட்டங்கள் தேவைப்பட்ட போது, ஷ தப்கான் (48 ஓட்டங்கள், 35 பந்து, 3 பௌண்ட்ரி, ஒரு சிக்ஸர்) ரன்-அவுட் ஆனார். இதன் பின்னர் நசீம் ஷாவும் (10 ஓட்டங்கள்), ஹாரிஸ் ரவூப்பும் (3 ஓட்டங்கள்) ஒரு பந்து மீதம் வைத்து “திரில்“ வெற்றியை பெற்றனர்.

பாகிஸ்தான் 49.5 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப் புக்கு 302 ஓட்டங்கள் குவித்து ஒரு விக்கெட் வித்தியா சத்தில் வெற்றி பெற்றது.

வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட தொடரை பாகிஸ்தான் 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது. (ஐ)

பிரபாகர் தமிழரசு

# ஒப்பரேஷன் குக்கூன்: வீரப்பனை உயிரோடு பிடிக்காதது ஏன்? அவருடன் தொடர்பில் இருந்தவர் யார்?

அக்டோபர் 18, 2004 - தர்மபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி நோக்கி மின்னல் வேகத்தில் சென்றுகெண்டிருந்த ஆம்புலன்ஸ் ஒன்று, எதிரே வந்த கரும்பு லாரியால் வேகத்தை குறைத்து நின்றது. சந்தேகத்தில் ஆம்புலன்சில் இருந்து வெளியே பார்த்த சந்தனமரக்கடத்தல் வீரப்பன், கரும்பு லாரியால் ஆம்புலன்ஸ் நின்றதாக நம்பினார்.

ஆனால், அடுத்த சில நொடிகளிலேயே அந்த நம்பிக்கை தகர்ந்தது. நாலாப்புறமும் இருந்து துப்பாக்கிக் குண்டுகள் துளைக்க அவர் பயணித்த ஆம்புலன்ஸே சல்லடைப் போல் ஆனது.

இந்த ஆபரேஷனுக்கு குக்கூன் (Cocoon) என பெயரிட்டிருந்தார்கள் விஜயகுமார் ஐபிஎஸ் தலைமையிலான தமிழ்நாடு அதிரடிப்படை அதிகாரிகள். ஒரு தசாப்தத்திற்கும் மேலாக போலீஸ் பிடியில் சிக்காத வீரப்பனை சுட்டுக்கொன்று சுமார் 19 ஆண்டுகளுக்குப் பிறகும், அவர் இறப்பு குறித்த சந்தேகங்களும் மர்மங்களும் இன்றளவும் நீங்காமல் உள்ளது.

இந்த குக்கூன் ஆபரேஷனுக்கு மூளையாக செயல்பட்டவர்களில் ஒருவரான செந்தாமரைக்கண்ணன் ஐபிஎஸ், இறுதியாக காவல்துறை கூடுதல் தலைமை இயக்குநராக பணியாற்றி கடந்த வருடம் ஜூன் மாதம் ஓய்வு பெற்றார்.

**ஆப்பரேஷன் குக்கூன் எப்படி சாத்தியமானது ?**

ஆபரேஷன் குக்கூன் குறித்து விரிவாக பேசிய செந்தாமரைக்கண்ணன், கடந்த காலங்களில் நடந்த ஆபரேஷனின் தொடர்ச்சிதான் குக்கூன் என்றார்.

“ஆபரேஷன் குக்கூனுக்கு முன் ஒரு ஆபரேஷன் நடத்தினோம். அதில், நான்கு பேர் தீவிரவாதிகளைப் போல வேண்டும் என வீரப்பன் கேட்டதால், நான்கு பேரை எங்கள் சார்பாக அனுப்பிவிட்டிருந்தோம். அவர்கள் 20 நாட்கள் வீரப்பனுடன் தங்கியிருந்தார்கள். அதுதான், அதிரடிப்படையின் நுண்ணறிவுப் பிரிவுக்கு கிடைத்த முதல் வெற்றி,” என்றார்.

இந்த ஆபரேஷன் தான், ஆபரேஷன் குக்கூனுக்கு அடித்தளம் எனக்கூறும் செந்தாமரைக்கண்ணன், அந்த 20 நாட்களில் வீரப்பனைப் பற்றி முழுமையான தகவல் கிடைத்ததாகக் கூறுகிறார்.

“அவரது தொடர்புகள் யார், எப்படி காட்டிற்குள் போகிறார்கள், என்ன யோசிக்கிறார்கள், அவரை யார் சந்திக்கிறார்கள், யார் அவருக்கு ஆயுதம் கொடுக்கிறார்கள், என்பதெல்லாம் அந்த ஆபரேஷனில் தான் தெரிந்தது. அந்த ஆப்பரேஷனில் நிறைய ஆபத்து இருந்தது, தெரிந்து தான் அனுப்பினோம். ஆனால், அதில் நிறைய தகவல்கள் கிடைத்தன,” என்றார்.

**வீரப்பனின் இரண்டு ஆசைகள் என்ன ?**

வீரப்பனை காட்டிற்குள் இருந்து வெளியே கொண்டு வர முடிவு செய்தது தமிழ் நாடு அதிரடிப்படை. அந்த 20 நாட்களில் வீரப்பனை அடிக்கடி சந்திப்பவர்கள், துப்பாக்கி சப்ளை செய்யும் சப்ளையர்கள், வியாபாரிகள் உள்ளிட்டோரின் தகவல்களைப் பெற்று, அவர்களைப் பயன்படுத்தி வீரப்பனை காட்டிற்குள் இருந்து வெளியே கொண்டு வர முடிவு செய்தது தமிழ் நாடு அதிரடிப்படை.

“அந்த 20 நாட்களில் கிடைத்த தகவல்களில் இரண்டு தகவல்கள் முக்கியமானது. ஒன்று, அவருக்கு கண் தெரிவதில்லை, அதனால், அதனை சரி செய்ய வேண்டும். காட்டிற்குள் மருத்துவர்களை அழைத்து வர முடியாது. அதனால், வெளியே வந்து கண் பார்வையை சரி செய்ய வேண்டும் என்பது முதல் ஆசை.

இரண்டாவது, சில தமிழ் தீவிரவாதிகள் அவருடன் இரண்டு வருடங்கள் இருந்தார்கள். அவர்கள் கொடுத்த ஊக்கத்தின் காரணமாக, தமிழ் மீதான பற்றும், தனித் தமிழ்நாடு மேலான ஈடுபாடும் அவருக்கு இருந்தது. அதனால், ஈழத்தை பார்க்க வேண்டும். தலைவர் பிரபாகரனை பார்க்க வேண்டும் என்ற ஆசை இருந்தது,” என்கிறார் செந்தாமரைக்கண்ணன்.






ஈழத்தில் இருந்து ஆயுதங்களை கொண்டு வந்து தனி தமிழ்நாடே அமைத்துவிடலாம், தமிழ் தலைவராக மாறலாம் என வீரப்பன் ஆசைப்பட்டதாகக் கூறுகிறார் செந்தாமரைக்கண்ணன்.

“இந்த மாதிரியான தவறாக கொள்கைகளை அவர்கள் வீரப்பனுக்கு புகுத்தியிருந்தார்கள். அதுதான் திசை திருப்புதல். அதனை எங்களுக்கு சாதகமாக மாற்றிக்கொண்டு, எங்கள் பக்கம் இருந்த சப்ளையர்களுக்கு சலுகைகள் கொடுத்து, அவர்களை மாற்றி, எங்கள் சார்பாக பேச வைத்து, அவருடைய எண்ணத்தை அவர்கள் நிறைவேற்றுவார்கள், உதவி செய்ய வழி முறை இருக்கென்று நம்ம வைத்து, அவரை காட்டில் இருந்து வெளியே கொண்டு வருவது தான் திட்டம்,” என்கிறார் செந்தாமரைக்கண்ணன்.





**வீரப்பனை எப்படி நம்ப வைத்தார்கள் ?**

இலங்கையை சேர்ந்தவராக செந்தாமரைக்கண்ணன் தான் வீரப்பனுடன் உரையாடிக்கொண்டிருந்துள்ளார். ஆனால், வீரப்பனை நம்ப வைக்க அதிரடிப்படையினர் போட்டிருந்த திட்டம் 100 வீதம் வெற்றி பெறும் என யாருக்கும் நம்பிக்கை இல்லை என்கிறார் செந்தாமரைக்கண்ணன்.

அதிரடிப்படையினர் பக்கம் இருந்த சப்ளையர்கள் மற்றும் வியாபாரிகள் மூலமாக இலங்கையை சேர்ந்தவராக செந்தாமரைக்கண்ணன்தான் வீரப்பனுடன் உரையாடிக் கொண்டிருந்துள்ளார்.

“சப்ளையர்கள் மூலமாக பேசிக்கொண்டிருந்தாலும், அவர் கேட்கும் கேள்விகளுக்கு அதிகமாக நான் பதில் அனுப்பவில்லை. அதிகம் பேசினால், அதிகம் கேள்விகள் வரும் சந்தேகங்கள் வரும். அதனால், அதனை தவிர்த்தேன். நானும் இலங்கையில் உள்ள போராளியைப் போல அளவாக ஒரு தலைவரைப் போலத்தான் பேசினேன். அதனால், அவருக்கு அதிக சந்தேகம் வரவில்லை,” என்கிறார்.

வீரப்பன் ஆயுதங்கள் எடுத்து வரலாமா ?, உடைகள் எடுத்து வரலாமா ? வேறு என்னவெல்லாம் தேவை என்று கேட்டதாக பகிர்ந்தார் செந்தாமரைக்கண்ணன்.

“எங்கள் தரப்பில் இருந்து நாங்கள் எதுவும் நிபந்தனைகளோ கட்டுப்பாடுகளோ விதிக்கவில்லை. அவர் ஆயுதங்கள் எடுத்து வரலாமா என்று கேட்டார். இங்கேயே நிறைய இருக்கு, வேண்டும் என்றால் ஆளுக்கு ஒன்று எடுத்துக்கொள்ளுங்கள். நிறைய எடுத்து வர வேண்டாம் என்றோம்.

மீசை, தலை முடியை சரி செய்ய வேண்டுமா எனக்



கேட்டு அனுப்பினார். மீசை இருந்தால் அடையாளம் தெரியும், எடுத்தால் அடையாளம் தெரியாது, எளிமையாக செல்லலாம் என்றேன். அவர் அதை எடுத்துவிட்டார்,” என்றார்.

அவருக்கு தேவையான ஆயுதங்களையும் சிலவற்றை தயார் செய்து அனுப்பியதாகவும் கூறினார் செந்தாமரைக்கண்ணன்.

“உரையாடல் மட்டும் நம்பிக்கை கொண்டு வரவில்லை. சந்தேகமின்றி அவருக்கு தேவையாவற்றையும் செய்து கொடுத்தோம். அதற்கு பிறகுதான் நம்பினார்,” என்கிறார் செந்தாமரைக்கண்ணன்.

**ஆபரேஷன் குக்கூன் எப்படி நடந்தது ?**

பிரத்யேகமாக தயாரிக்கப்பட்ட ஆம்புலன்சில், வீரப்பன் எந்த பக்கம் அமர்ந்திருக்கிறார், அவருடன் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பதை கண்காணிக்க ஆம்புலன்சினுள் கேமரா பொருத்தியிருந்துள்ளனர்.

வீரப்பனிடம் முன்னதாகவே கூறியிருந்தபடி, தர்மபுரி மாவட்டம் மேற்குதொடர்ச்சி மலை பாடி வனத்தை யெட்டியிருந்த தண்ணீர் தொட்டியின் அருகே அதிரடிப்படையினர் சார்பாக பிரத்யேகமாக தயார் செய்யப்பட்டிருந்த ஆம்புலன்ஸ் வாகனம் சென்றது.

“அந்த ஆம்புலன்சில் என்னுடைய ஓட்டுநர் சரவணனும், உதவி ஆய்வாளர் வெள்ளத்துரையும் இலங்கைக்கு அழைத்துச் செல்லும் நபர்களாக சென்றிருந்தார்கள். சந்தேகத்தின் பேரில் அவர்கள் இருவரையும் வீரப்பன் பிடித்து வைத்துக்கொண்டால், என்ன செய்வது என்று அவர்களின் பாதுகாப்புக்காக கைத்துப்பாகிகள் கொடுக்கப்பட்டிருந்தது. அதேபோல, அவர்களிடம் எறி குண்டுகளும் கொடுக்கப்பட்டிருந்தது,” என விவரிக்கிறார் செந்தாமரைக்கண்ணன்.

பாடி பகுதியில் இருந்து தர்மபுரிக்கு மூன்று சாலை வழியாக செல்லலாம் என்பதால், மூன்று சாலைகளிலும் தங்களது குழுவினர் தயாராக இருந்ததாகக் கூறுகிறார்.

“நாம் திட்டமிட்ட பாதையில்தான் அவர் வர வேண்டும் என்பது இல்லை. அவர் திடீரென சந்தேகத்தில், வழியை மாற்றச் சொன்னால், அதற்கும் தயாராக இருக்க வேண்டும், ஆனால், நல் வாய்ப்பாக அவர் நாங்கள் திட்டமிட்ட சாலையில் தான் பயணித்தார்.

அதனை கண்காணித்து தெரிவிப்பதற்காகவே எங்கள் அதிரடிப்படையை சேர்ந்த குமரேசன் என்பவர் அந்த சாலையில் இரண்டு மாதங்களாக ஒரு ஹோட்டலில் பரோட்டா மாஸ்டராக பணியாற்றி வந்தார். அவர் ஆம்புலன்ஸ் வரும் வழியை கண்காணித்து நாங்கள் இருக்கும் சாலையில் தான் ஆம்புலன்ஸ் வருகிறது என்பதை உறுதி செய்து தகவல் கொடுத்தார்,” என்றார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

# நிலவில் கால் பதிக்கும் கனவை நிஜமாக்கியவர்!

வ.மு.முரளி





சந்திரயான்-3 விண்கலத்தின் இலக்கு, சந்திரனில் தரையிறங்கி ஆய்வு மேற்கொள்வது. இதற்காக வடிவமைத்து அனுப்பப்பட்டுள்ள தரையிறங்கும் சாதனமான லூனார் லேண்டருக்கு இடப்பட்டுள்ள பெயர் 'விக்ரம்'. விக்ரம் என்றால் வெற்றி என்று பொருள். அது மட்டுமல்ல, இந்த 'விக்ரம்' என்ற சாதனையின் பின்புலத்தில் மகத்தான ஒரு விஞ்ஞானியின் தீர்க்கதரிசன முயற்சிகள் ஒளிர்கின்றன. அவர்தான், இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பை (இஸ்ரோ) நிறுவிய விக்ரம் அம்பாலால் சாராபாய்.

இன்று உலக அரங்கில் விண்வெளி ஆராய்ச்சியில் இந்தியா முன்னிலை வகிக்கிறது. பிற நாடுகளின் செயற்கைக்கோள்களை வர்த்தகரீதியாக விண்ணில் செலுத்தும் வல்லமையையும் இந்தியா பெற்றிருக்கிறது. தவிர கண்டம் தாண்டிச் செல்லும் அதிநவீன ஏவுகணைகளையும் இந்தியா உருவாக்கியிருக்கிறது. இதற்கெல்லாம் மூல காரணமானவர் தான் விண்வெளி விஞ்ஞானியான விக்ரம் சாராபாய்.

குஜராத்தின் ஆமதாபாத்தில், 1919, ஆக. 12-இல், செல்வாக்கான சமணக் குடும்பத்தில் பிறந்தவர் விக்ரம் சாராபாய். அவரது தாத்தா குஜராத்தில் மருந்து உற்பத்தி ஆலை உள்ளிட்ட பல தொழிற்சாலைகளை நிறுவியவர். வசதியான குடும்பத்தில் பிறந்தாலும் குடும்பத் தொழில்களுடன் முடங்கிவிடாமல், கணிதம், இயற்பியல் பாடங்களில் ஏற்பட்ட ஆர்வத்தால், விஞ்ஞான ஆய்வுக்காக தனது வாழ்வை அர்ப்பணித்தார் விக்ரம்.

லண்டனிலுள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் டிரிப்போ பட்டம் பயின்று (1940) நாடு திரும்பிய விக்ரம், பெங்களூரிலுள்ள இந்திய அறிவியல் கழகத்தில் பிரபல விஞ்ஞானி சேர்.சிவி.ராமனின் வழிகாட்டலில் அண்டக்கதிர்கள் (Cosmic Rays) தொடர்பாக ஆராய்ச்சி நடத்தினார். 1945-இல் மீண்டும் லண்டன் சென்ற விக்ரம், ஆராய்ச்சிப் படிப்பைத் தொடர்ந்தார். வெப்ப பிரதேசங்களில் அண்டக் கதிர்களின் தாக்கம் குறித்த ஆய்வுக்காக அவர் 1947-இல் டாக்டர் பட்டம் பெற்றார்.

பிறகு நாடு திரும்பிய விக்ரம், தனது குடும்பத்தினரின் ஒத்துழைப்புடன் 1947, நவ. 11-இல் ஆமதாபாத்தில் இயற்பியல் ஆராய்ச்சி ஆய்வகத்தை (Physical Research Laboratory -PRL) நிறுவினார். அங்கு அண்டக் கதிர்கள் குறித்த தனது ஆராய்ச்சியைத் தொடர்ந்தார். பின்னாளில் இந்தியா விண்வெளித் துறையில் பல சாதனைகளை நிகழ்த்த உந்துசக்தி அளித்த மையம் இதுவே.

விக்ரம் சாராபாய், சிறந்த விஞ்ஞானி மட்டுமல்ல, அவர் நிறுவனங்களைக் கட்டமைப்பதில் தேர்ந்தவர். நாட்டின் முக்கியமான பல ஆய்வு நிறுவனங்கள் அவரால் தான் தொடங்கப்பட்டு, வளர்த்தெடுக்கப்பட்டன.

குஜராத் மாநிலத்திலுள்ள ஜவுளி ஆலைகளின் பிரச்னைகளை ஆராய்ந்து தீர்க்க ஆமதாபாத் ஜவுளித் தொழிலாளிகள் ஆராய்ச்சி சங்கத்தை 1947-இல் நிறுவிய விக்ரம், 1966 வரை அதை வழிநடத்தினார். இன்று குஜராத் மாநிலம் ஜவுளித் துறையில் சிறந்து விளங்குவதற்கு இந்த அமைப்பின் பின்புலமே காரணம்.

விக்ரம் தொழில் குடும்பத்தைச் சார்ந்தவராக இருந்ததால், மேலாண்மைத் துறையில் இந்தியா பின்தங்கி இருப்பதை உணர்ந்தார். அவரது கூட்டு முயற்சியால் ஆமதாபாத்தில் இந்திய மேலாண்மைப் பள்ளி 1961-இல் நிறுவப்பட்டது. அதன் முதல் இயக்குநராகவும் விக்ரம் பணியாற்றினார்.

கணிதம், அறிவியலில் மாணவர்களின் ஆர்வத்தை வளர்க்கவும், அறிவியல் கல்வியில் புதுமைகளைப் புகுத்தவும், விக்ரமால் சமுதாய அறிவியல் மையம் 1960-இல் ஆமதாபாத்தில் துவங்கப்பட்டது. அது தற்போது விக்ரம் சாராபாய் பெயரில் (VASCSC) அறிவியல் பணிகளை ஆற்றி வருகிறது.

1942-இல் கேரளத்தைச் சேர்ந்த பரத நாட்டியக் கலைஞர் மிருணாளினியை விக்ரம் திருமணம் செய்தார். இவர்கள் இருவரும் இணைந்து ஆமதாபாத்தில் நிறுவிய 'தர்ப்பண்' நிகழ்த்து கலை கல்வி நிறுவனம் இன்றும் கலைகளை வளர்த்து வருகிறது.

குஜராத் மாநிலத்தில் உள்ள ஜவுளி ஆலைகளின் பிரச்னைகளை ஆராய்ந்து தீர்க்க ஆமதாபாத் ஜவுளித் தொழிலக ஆராய்ச்சி சங்கம்(ஆதிரா), ஆமதாபாத்தில் இந்திய மேலாண்மைப் பள்ளி (ஐஐஎம்-ஏ), தமிழகத்தின் கல்பாக்கத்திலுள்ள அதிவேக ஈனுலை, கொல்கத்தாவிலுள்ள மாறுபடும் ஆற்றல் முடுக்கி திட்டம், ஹைதராபாத்திலுள்ள இந்திய மின்னணுவியல் நிறுவனம், ஜார்கண்ட் மாநிலம், ஜாடுகுடாவிலுள்ள யுரேனியம் உற்பத்தி நிலையம் ஆகிய நிறுவனங்கள் விக்ரம் சாராபாயால் நிறுவப்பட்டவை.

## இஸ்ரோவின் உதயம்:

நாடு சுதந்திரம் பெற்ற பிறகு, விண்வெளித் துறையில் நாடு வளர வேண்டியதன் அவசியத்தை விக்ரம் அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தினார். அவருக்கு மூத்த விஞ்ஞானியான ஹோமி ஜஹாங்கீர் பாபாவும் உறுதுணை புரிந்தார்.

ரஷ்யாவின் 'ஸ்புட்னிக்' விண்கலம் விண்ணுக்கு ஏவப்பட்டதன் தொடர்ச்சியாக உலக நாடுகளில் விண்வெளித் துறை கவனம் பெற்றது.

ஆனால் இந்தியா போன்ற ஏழை நாட்டுக்கு இது தேவையில்லை என்று பலர் விமர்சித்தனர். அவர்களுக்கு விக்ரம் சாராபாய் அளித்த பதில் அவரது தொலைநோக்கையும் தேசபக்தியையும் வெளிப்படுத்தியது:

"வளரும் நாடான இந்தியாவுக்கு விண்வெளி ஆராய்ச்சி தேவையா? என்று சிலர் கேட்கின்றனர். அதன் பயன்பாட்டில் நமக்கு எந்த சந்தேகமும் இல்லை. பொருளாதாரத்தில் வளர்ந்த நாடுகள் போல புதிய நிலவுகளையும் கோள்களையும் கண்டுபிடிக்கும் போட்டியில் இறங்கும் எண்ணம் நமக்கு இல்லை.

ஆனால், நாம் தேசம் என்ற அளவில் மதிப்புடன் திகழ வேண்டுமானால், உலக நாடுகளிடையே நிமிர்ந்து நிற்க வேண்டுமானால், மனித சமுதாயம் எதிர்கொள்ளும் சவால்களுக்குத் தீர்வு காணும் அதிநவீனத் தொழில்நுட்பங்களில் வேறெந்த நாட்டுக்கும் சளைக்காதவர்களாக நாம் இருந்தாக வேண்டும்" என்றார் விக்ரம் சாராபாய்.

இந்தியாவுக்கென தனித்த ராக்கெட் ஏவுதளம் வேண்டும் என்றும் விக்ரம் சாராபாய் கனவு கண்டார். அவரும் ஹோமி பாபாவும் மேற்கொண்ட தீவிர முயற்சிகள் காரணமாக, அரசு அதற்கு சம்மதித்ததுடன் அதற்கான பொறுப்பை விக்ரமிடமே ஒப்படைத்தது.

விக்ரமின் தளாரா முயற்சியின் பலனாக, இந் தேசிய விண்வெளி ஆராய்ச்சிக் குழு 1962-நிறுவப்பட்டது.

அதையடுத்து, கேரளத் தலைநகரான திருவனந்தபுரத்தின் ஒருபகுதியான தும்பாவில் ராக்கெட் ஏவுதளத்தை (வுநுசுடுளு) 1963-இல் விக்ரம் அமைத்தார். நிலநடுக்கோட்டுக்கு மிக அருகில் உள்ள இந்த மையம் ராக்கெட்களை ஏவுவதற்கு மிகவும் ஏற்தாகும். இங்குதான் டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் விக்ரம் சாராபாயின் கீழ் பணி புரிந்தார் என்பது குறிப்பிட வேண்டிய தகவல்.

1963, நவ. 21-இல் தும்பாவில் இருந்து இந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதல் ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் ஏவி பரிசோதிக்கப்பட்டது.

1969-இல் இந்திய தேசிய விண்வெளி ஆராய்ச்சிக் குழு, இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பாக (Indian Space Research Organisation-ISRO) மாற்றம் பெற்றது. அதன் வளர்ச்சிக்கும், அதில் திறம் மிகுந்த இளம் விஞ்ஞானிகள் இணையவும், அடித்தளமாக விக்ரம் செயல்பட்டார்.

இதனிடையே இந்திய அணுசக்தி ஆணையத்தின் தலைவராக இருந்த ஹோமி பாபா 1966-இல் அகால மரணம் அடைந்ததைத் தொடர்ந்து, அரசின் வேண்டுகோளை ஏற்று அதன் தலைவராகப் பொறுப்பேற்ற விக்ரம், 1971 வரை அதைத் திறம்பட வழிநடத்தினார். அப்போது அணுசக்தியை பாதுகாப்புக்குப் பயன்படுத்தும் நடைமுறைகளை விக்ரம் உருவாக்கினார். பல அணு உலைகள் இக்காலத்தில் உருவாக்கப்பட்டன.

உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட செயற்கைக்கோளை விண்ணில் ஏவ வேண்டும் என்பது விக்ரமின் பெருங்கனவு. அவரது வழிகாட்டலில் இயங்கிய விஞ்ஞானிகள் குழு, அவரது மறைவுக்குப் பிறகு 1975-இல் முதல் இந்திய செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தி சாதனை படைத்தனர்.

இடைவிடாத ஆய்வுப் பணிகள், புதிய விஞ்ஞானக் கட்டமைப்புகளை நிறுவுதல், இளம் விஞ்ஞானிகளை உருவாக்குதல் போன்ற பணிகளில் துடிப்புடன் இயங்கிய விக்ரம் சாராபாய், 1971, டிசம்பர் 30-இல் தனது 52-வது வயதில் காலமானார்.

அவருக்கு பாரத அரசு, சாந்தி ஸ்வரூப் பட்நாகர் விருது (1962), பத்மபூஷண் (1966), பத்மவிபூஷண் (1972) ஆகிய விருதுகளை அளித்து கௌரவித்தது. திருவனந்தபுரம் விண்வெளி ஆய்வு மையத்துக்கு விக்ரம் சாராபாய் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

அண்டக்கதிர் ஆய்வில் விக்ரம் அளித்த பணிக்காக, நிலவின் அமைதிக்கடல் பகுதியிலுள்ள கருங்குழிக்கு 1973-இல் விக்ரமின் பெயர் உலக விஞ்ஞானிகளால் சூட்டப்பட்டடுள்ளது.

விக்ரம் சாராபாயின் நினைவைப் போற்றும் வகையில் அவரது பெயரிலான லூனர் லேண்டர், ஆக. 23, 2023 அன்று மாலை 03.45 மணியளவில் நிலவில் தரையிறங்கி சரித்திரம் படைக்க இருக்கிறது. "சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்!" என்று பாடிய தமிழகத்தின் மகாகவி பாரதி கண்ட கனவை நனவாக்கும் நமது விஞ்ஞானிகளுக்கு ஒரு வீரவணக்கம் சொல்வோமே!

●

# ஒப்பரேஷன் குக்கூன்....

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரத்யேகமாக தயாரிக்கப்பட்ட ஆம்புலன்சில், வீரப்பன் எந்த பக்கம் அமர்ந்திருக்கிறார், அவருடன் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பதை கண்காணிக்க ஆம்புலன்சினுள் கேமரா பொருத்தியிருந்துள்ளனர்.

அவர் எந்தப் பக்கம் அமர்ந்திருந்தார் என்ற தகவல் தான் அவரை சரியாக சுடுவதற்கு உதவியாக இருந்ததாகக் கூறும் செந்தாமரைக்கண்ணன், ஆபரேஷன் குக்கூன் நடத்த திட்டமிட்டிருந்த இடத்தை ஆம்புலன்ஸ் வந்ததும், நான்கு புறங்களிலும் அதிரடிப்படையினர் இருந்ததாகத் தெரிவிக்கிறார்.

“நாங்கள் குறித்து வைத்த இடத்திற்கு ஆம்புலன்ஸ் வந்தபோது, ஆம்புலன்ஸூக்கு முன் எங்கள் சார்பாக நிற்க வைத்திருந்த கரும்பு லாரி இருந்தது, பின் புறம் அதிரடிப்படையை சேர்ந்த திருநாவுக்கரசு ஒரு வாகனத்தில் பின்தொடர்ந்து வந்தார். வலது புறம் உள்ள ஒரு பள்ளியின் சுற்றுச்சுவருக்கு பின்னால் ஆயுதம் ஏந்திய அதிரடிப் படையினரும், இடது புறத்தில் பழைய பஞ்சரான ஒரு லாரியில் ஆயுதம் ஏந்திய அதிரடிப்படையினரும் இருந்தோம்.” என விவரிக்கிறார் செந்தாமரைக்ககண்ணன்.

**10 அடி தூரத்தில் இருந்து வீரப்பனை சுட்ட போலீஸ்**

வீரப்பனை அருகில் இருந்து சுட்டுக்கொன்றதாக எழுப்பப்படும் கேள்வி உண்மைதான் என்கிறார் செந்தாமரைக்கண்ணன்.

ஆம்புலன்ஸ் நின்றதும், அதில் இருந்து ஓட்டுநர் சரவணனும், உதவி ஆய்வாளர் வெள்ளத்துரையும் இறங்கி ஓட, நடப்பது புரியாமல் இருந்துள்ளார் வீரப்பன்.

“வண்டி நின்றதும் வீரப்பன் வாகனத்தின் வெளியே பார்க்கிறார். முன்னால் கரும்பு லாரி இருந்ததால், அவர் சந்தேகிக்கவில்லை. பின், ஓட்டுநரும், உதவி ஆய்வாளரும் இறங்கி ஓடும்போது, வெள்ளத்துரையிடம் வாகனத்திற்குள் வீசுவதற்காக கொடுத்திருந்த எறி குண்டை அவர், பதற்றத்தில் வாகனத்திற்கு கீழ் போட்டுவிட்டார். அதற்கு பிறகு ஆம்புலன்சின் பின் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த விளக்குகள் எரியும்போதுதான், வீரப்பனுக்கு தான் போலீஸ் பிடியில் சிக்கியதையே உணர்கிறார்,” என்றார்.

வீரப்பனை அருகில் இருந்து சுட்டுக்கொன்றதாக எழுப்பப்படும் கேள்வி உண்மைதான் என்கிறார் செந்தாமரைக்கண்ணன்.

“வீரப்பன் எந்த திசையில் இருந்தார் என்பது எங்களுக்கு முன்னதாகவே தெரியும். ஆம்புலன்ஸ் சரியாக அந்த பஞ்சரான லாரிக்கு மிக அருகில் நின்றது. அந்தப் பக்கம்தான் வீரப்பனும் அமர்ந்திருந்தார். லாரிக்கும் ஆம்புலன்சுக்கும் இடையில் 10 அடி தூரம் கூட இருக்காது. அந்தப் பக்கம்தான் இருக்கிறார் ‘ஹூட்’ என நாங்கள் உத்தரவு கொடுத்ததும், அவரை சுட்டனர். அது நேரடியாக அவர் தலையில் பட்டது. பட்டதும், அவர் முன்னால் சாய்துவிடுகிறார்,” என விளக்கினார் செந்தாமரைக்கண்ணன். ●



## கல்முனை வலயத்தில் இரு கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளுக்கு புதிய நியமனம்

காரைதீவு, ஓக. 26

கல்முனை வலயத்தில் இரு இலங்கை கல்வி நிருவாக சேவை அதிகாரிகளுக்கு புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கல்முனை கோட்டத்தின் கோட்டக் கல்விப்பணிப்பாளராக உதவிக் கல்விப் பணிப்பாளர் யூ.எல்.றியால் நியமிக்கப்பட்டார்.

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியின் புதிய அதிபராக முன்னாள் கல்முனை கோட்டக்கல்விப்பணிப்பாளர் நஸ்மியா சனூஸ் நியமிக்கப்பட்டார்.

இருவருக்குமான நியமனக்கடிதங்களை கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம் எஸ் சஹதுல் நஜீம் வழங்கி வைத்தார்.

நேற்று அவர்கள் கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டனர்.

## 48 ஆயிரம் விவசாயிகள் வறட்சியினால் பாதிப்பு!

கொழும்பு, ஓக. 26

வறட்சியினால் 48 ஆயிரத்து 726 இற்கும் அதிகமான விவசாயிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வறட்சியான காலநிலை காரணமாக ஏற்பட்ட காட்டுத்தீ சம்பவங்களில் ஆறாயிரம் ஏக்கருக்கும் அதிகமான வனப்பகுதி தீக்கிரையாகியுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன், நாட்டில் நெற்பயிர் செய்கை மேற்கொள்ளப்பட்ட 53 ஆயிரத்து 774 ஏக்கருக்கும் அதிகமான விவசாயநிலங்களும் வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சின் தரவுகள் தெரிவிக்கின்றன. (அ)



இந்து சுமங்கலிப் பெண்கள் அனுஷ்டித்து வரும் வரலட்சுமி விரதமானது நேற்று வெள்ளிக்கிழமை காரைதீவு சிறீ நாராயணன் சுவாமி ஆலயத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. (அ)

## மருத்துவர்களின் போராட்டம் நிறைவு!

கொழும்பு, ஓக. 26

மருத்துவ தொழில் வல்லுநர் ஒன்றியம் முன்னெடுத்து வரும் அடையாளப் பணிப்புறக்கணிப்பு போராட்டம் நேற்று வெள்ளிக்கிழமை காலை 8 மணியுடன் நிறைவடைந்ததாக ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

இந்தப் போராட்டம் ஆட்சேர்ப்பில் காணப்படும் பிரச்னை, கொடுப்பனவு வழங்காமை உள்ளிட்ட 7 கோரிக்கைகளை முன்வைத்து நேற்று முன் தினம் காலை 8 மணி முதல் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

